[illegible]

V1. No. 33 16 Au 1938

211, N28 KN
M28·1'33
189016.

Reg. No. M. 2324.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஸ் ஆகஸ்டுமீ 16உ [No. 33.

20 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	641
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	643
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	644
4.	தமிழ்ப் பாடம்	647
5.	சிவகாமி சரித ஆராய்ச்சி N. துரைக்கண்ணன்	649
6.	தேவாரமும் ஐந்திணையும் E.N. தணிகாசலமுதலியார் B.A.,B.L.	651
7.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A.,B. L.	654
8.	வானசாஸ்திரம்	657
9.	வர்த்தமானம்	659

கலா நிலயம்.

சொல்வோரிற் கேட்பவ ரருமை VII.

18904

மனிதனுள் கலந்திருக்கின்ற அம்சங்கள் எல்லாவற்றையும் ஒருங்கே இணைத்துச் சமமாய் வளர்ப்பதற்கு மாறாக, அவைகளுள் ஒவ்வொன்றே பற்றி இந்த இந்தக் காரியத்திற்கு இது இது போதுமென்று சுலபவழி நாடுவார் செய்திறம் முடியும் வகை யாதென இரவீந்திரநாதர் கூறியதோடமையாது, ஆள்வினையால் யாவும் முற்றுற ஆற்றுதற்கும், அதற்கஞ்சிச் சுலபவழி தொடர்வதற்கும் உள்ள வேறுபாட்டை மரக்கலத்திற்கும் தெப்பத்திற்குமுள்ள வேறுபாட்டின் உதாரணத்தால் விளக்க இனிப் புகுகின்றார்.

நீர்மேல் செல்ல வேண்டுமாயின் அதற்கு ஓர் வாழைக்கட்டைத் தெப்பம் போதுமென நினைக்கலாமோ! பார்ப்பதற்குரிய அமைப்பினழகு அதற்கு இல்லாததோடு உபயோகத்தையே கருதுங் காலத்திலும், தெப்பத்தால் நீர் நினைத்தபடி செல்ல இயலுமேயல்லாது நாம் நினைத்தபடி விரைந்தும் மெல்லவும் நீரினோட்டத்தை எதிர்த்தும் தொடர்ந்தும் செல்வது சாத்தியமில்லை. அழகும் இன்பமும் பொருளும் தர்மமும் இவையனைய யாவும் ஒருங்கே எய்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் எனும் தாளாண்மை இல்லாமல், இவைகளுள் ஒன்றொன்றே பெறுவது சுலபமாகையால், ஒன்றே பெற்று அதுகொண்டு உய்க்கும் இடம் போதும் என்று விவகரிப்பவர் இவ்வாழைக் கட்டைத் தெப்பத்திற்கு நிகராவர். ஆனால் நிறைவுற்ற வாழ்க்கை வாழ்வதெனில் மனிதன் பிரபஞ்சத்தின் எத்தகைய தோற்றத்தோடும் தளராமல் ஊடாடுவதற்கு ஏற்றவனாயிருத்தல் வேண்டும். அத்தகையவன், ஜடசாஸ்திரத்தினறிவால்செய்தமைத்தபாயும் பாய்மரமும் சுக்கான்முதலிய பலஎந்திரங்களும்,உபயோகங் கிடக்க அழகிற்கியன்ற கலையுணர்வால் செய்த அலங்காரமும் உருவஅமைப்பும்,வாய்ந்த ஒரு வங்கம் போன்றவன். எல்லாச்சக்திகளும் எல்லா அம்சங்களும் அதனில் சமமாகச் சீர்படுத்துப் பட்டிருக்கின்றன. கடுங்காற்றிற்கும் ஈடுகொடுத்துத் தன்னிலை தளராது நிற்கவல்லதும், தன்னழகால் பார்ப்போரை மகிழ்விக்கக் கூடியதும், இவ்வாறு அறிவு ஆள்வினை அழகு என்னும் பல அம்சங்கள் சேர்ந்தமைந்த, நாவாயே யாகும். ஆதலால், இரவீந்திரநாதர்,

> ஆன்ம சம்பூரணத்தேர்ச்சி, வாழ்க்கைச் செல்வங்கள் அனைத்தும் தன்னுள் அடங்கப் பெற்றிருக்கிற தென்பதையும், அவ்வான்மத் தேர்ச்சியே அச்செல்வங்களுக் கெல்லாம் பொருந்தியவோர் ஒற்றுமை அர்த்தத்தைத் தருகின்ற தென்பதையும் நாம் ஒருபோதும் மறவாமல் காத்துவர வேண்டும்,

என்று விதிக்கின்ற வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஒவ்வோர் உலகத்தளவு உண்மைப் பொருள் தன்னுள் அடங்கப் பெற்றிருக்கின்றது.

இதுகாறும் நாம் கூறிவந்த இவ்விரவீந்திரநாதரின் வசனங்களை வாசித்தவர், அவரவர் அவரவாது

அறிவிற்கும் விஷயங்களை ஊன்றி ஆராய்ந்து பார்ப்பதற்குப் பழகியுள்ள மனதின் தேர்ச்சிக்கும் ஏற்றவாறு பொருள் கண்டிருப்பார். அவ்வாறு ஊன்றி ஆராயும் பழக்கமேனும் விருப்பமேனும் இல்லாதார்க்கு இவையாவும் வெற்றுரைகளாகத் தோன்றுவது இயல்பே. ஆனால் அறிவாளிகளாயும், எப்பொருட்கும் மெய்ப்பொருள் காணவேண்டும் எனும் முயற்சி யுடையாராயும் அமைந்தவர், தம் மனத்தின்கண் பலமுறை பலபடி தோன்றித்தோன்றித் தெளிவுரு தழிந்து சொப்பனம்போல் போய்விட்ட எண்ணங்களை இரவீந்திரநாதரின் சொற்கள் மீண்டெழுப்பி அவைகளுக்கு நிலையாயவோர் உருவமும் கொடுத்து, அவர்களது வாழ்வோடியன்றிருந்து, உய்யும் இடம் உய்க்கும் வழித்துணையுமாக்குவிக்கும் என்பதற்கையமில்லை. இதனை உணர்ந்தோரே பின் அவர் அரவிந்தருக்குக் கூறியதாகச் சொல்கின்ற சொற்களையும் உணர்வர்.

நம் புலவர் பெருமான் இதுவரையில் சொல்லி வந்தன யாவும், அரவிந்தகோஷை அவர் சந்திப்பதற்கு என்று சென்ற வழியில், இக்கால உலகியல் நடை முறைகளைப்பற்றி அவர் மனதில் எழுந்த நினைவுகளே யாகும். அவர் வகுத்த இலக்கணத்திற்கிணங்கிய உண்மைக் குரு அரவிந்தரே ஆவரென மதித்துச் சென்றார். சென்றவரைத் தரிசித்தபோது அவருடைய மதிப்புப் பின்னும் பலப்பட்டது. ஆன்மாநுபவத்தை யடைந்த அருமையினை ரென்பதை அரவிந்தர் முகத்தைப்பார்த்த மாத்திரத்திலேயே அறிந்து கொண்டார். நெடுநாள் அவர் முயன்ற முயற்சியெல்லாம் அவருளே திரண்டிருப்பதால், அவர் வாய்திறந்து யாதும் கூறுவிடினும் அவரைக் கண்டவர்க்குக் கண்ட மாத்திரத்திலேயே தாமும் அம்முயற்சியில் தலைப்பட வேண்டும் எனும் ஊக்கத்தை அளிக்கும் காட்சியர் அரவிந்தர். இவர் இப்பெருநிலை எய்துதற்கு உடலையும், பல்வேறு முறைகளை யனுசரிக்கும் யோகிகளைப்போல், வலிந்து வருத்திக் கொண்டவராகக் காணவில்லை. தனக்கொரு நன்மையைத் தேடிக்கொள்வது எத்துணை இழிந்ததோ அத்துணை இழிந்ததே தனக்குத் துன்பத்தை வலிந்து தேடிக்கொள்வது மென்பர் இரவீந்திரநாதர். இதைத்தான் 'சுயவதைச் செருக்கால் கொண்டவெறி' என்னும் சொற்களால் குறிக்கின்றனர். அரவிந்தர் அம்முறையை ஏற்றவரல்லர்.

அரவிந்தருடைய உருவமே 'ஓம்' என்னும் அச்சொல்லைப் பேசி நிற்பதுபோல் தோன்றுகின்றது. முன்சொன்னவாறு மாநுட ஆன்மா உடலளவிற்குள் சிறையடங்காமல், ஆயுள் காலத்திற்குள் தொடங்கி முடியாமல், எங்கெங்கும் எந்நாளும் தானேயாய்ப் பிரபஞ்சத்தில் வியாபிக்கின்ற சுதந்தரத்தை அளிக்கின்றது, பண்டைநாள் இந்திய முனிவர்கள் "ஓம் சாந்தி சாந்தி சாந்தி:" என்றோதும் ஆசிச்சொல். நிறைமொழி மாந்தராய அம்முனிவர் இச்சொற்கள் சொல்வது மல்லாமல், அச்சொல்லோடு அதன் பொருளையும் சேர்த்தளிக்கும் வல்லமை யுடையரா யிருந்தனர். அக்காலம் அன்னபடி முனிவர்கள் ஓதி ஓதி உலகத்தை உய்வித்த இச்சொல்லை இக்காலம் அன்னவகை ஆற்றலோடு உரைத்துச் சகமெலாம் சாந்திபெறும்படி நடத்துதற்கொத்தவர் அரவிந்தரே யாவர் என நம் கவிவரர் உணர்ந்தார்.

உலகத்தின் பற்பல பாகங்கள் லோகாயதப் பேயால் பற்றுண்டு திரியாமல் அவைகளுக்கு நற்கதி அளிக்கும் நல்லுரை புகட்டவல்லது இவ்விந்திய தேசம். 'ஓம்' என்னும் பிரணவமந்திரத்தின் பரிபூரணப் பெருமையை உபதேசம் செய்யவல்லவர் அரவிந்தராகையால், இவ்வுபதேசத்தை அரவிந்தர் வாய்நின்று பொற்றுக்கொள்ள நாமும் மற்றையோரும் காத்திருக்கின்றனர். "பண்டைநாள் இந்தியர் கண்டின சாந்தியை உலகம் அடையுமாறு நம் வாய்த்திறந்து அச்சொல்லைச் சொல்லியருளும்" என்று இரவீந்திரநாதர் அரவிந்தரை வேண்டுகின்றார்.

ஆம், இது தக்கதே. சிலேடை சில பயிலயாம் சிந்திக்கவில்லை யாயினும், அரவிந்தம் வாய்மலர இரவிதான் வருதல் வேண்டும். அரவிந்தரிடத்தில் அச்சொல் உளதென்று காணவல்லார் இரவீந்திரநாதரனைய கலைஞரேயாவர். கண்டவிடத்தும், எதனிலும் மேலதாய் அதைத் தாவென்று கேட்க நினைப்போரும் கவிஞர். கேட்டுப்பெற்றதின் பொருளும் பெருமையும் உணர்ந்து போற்றுதற்குரியோரும் கவிகளன்றி வேறு யாருளர். 'ஓம்' என்னும் இம்மூல மொழியை உண்மையா யுரைக்கவல்லார் அரிதினும் அருமையா யிருக்கின்றனர் மெய்யே. ஆயினும் என்! உரைப்பினும் அதைக் கேட்பதற் கொத்தவர் அதனினும் அருமை. வக்தா சுரோதாச துர்லப:. கலையின் பழக்கத்தால் அழகொடு தழுவிக் குழைந்து நிற்கின்றவர்கள்தாம் 'ஓம்' என்னும் சொல்லிற்கு இங்கு இரவீந்திரநாதர் உரைத்த உரையெல்லாம் ஊகித்திருப்பர். சொல்லவும் கேட்பர். சொன்னலும் தெரிந்து கொள்வர். சிறியதின்சிறுமை நோக்கி விலக்குவதும், பெரியதின் பெருமை பார்த்து மகிழ்வதும் அழகு தரும் பயிற்சி. மறைகள் உள, மறைக்கு நிகராய குறள்கள் உள. அரவிந்தரைப் போன்ற உத்தம புருடர்கள், சொல்லரிய அம்மறைநெறியை ஒரு சொல்லால் உணர்த்தவல்லார் ஒருவ ரிருவர் உளராயினும் ஆகலாம். ஆயினும் என்! கண்ணிலார்க்குக் கதிரோன் இருந்து என் செய்தான். புண்ணுடைய கண்ணராயின் சூரியனுடைய ஒளிக்குக் கூசுதலல்லாது வேறுபயன் அவர்க்கில்லை.

புண்ணையே இரு கண்ணென்று கொட்டித் திரிகின்றதாயமைந்த இக்காலத்தில் கலைகளாலன்றி வேறுகதி மாந்தருக் கிலதென்று முன், கலாநிலயம் செய்யும் கருமமும் செயல்வகையும், என்ற தலையங்கங்களில் தொடர்ச்சியாய்க் காட்டி வந்தோம். இரவீந்திர நாதரின் கட்டுரைக்கு நாமிங்கு எழுதித்தந்த இவ்வேழு தலையங்கங்களோடு அவைகளையும் சேர்த்து ஓரேவரிசையில் ஓதினல் கலையினகாட்சிக்கு நாம் கொடுக்கின்ற முதலிடக் கொள்கை நன்கு தெரியவரும். அது தெரிந்தவர், "அரவிந்த, இரவீந்திர நாதனின் வந்தனமி தேற்றுக்கொள்" எனக் கவிவரர் முனிவரரோ டளவளாவிய பெருமையைப் பாராட்டி, மற்று இன்னர் உறவினல் வரும் பெரும் நலன்களுக்கெல்லாம் பாத்திராவர்.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(625-வது பக்கத் தொடர்ச்சி)

29. பூசையும் பொய்க்கவில்லை.

சித்ராங்கனுக்கு வந்துள விபத்தெல்லாம் வெளிநின்ற மணிவாளனல் எய்திய வென்று நினைத்திருந்த மந்தாகினி, "நீயே கொல்" என்று அவன் உரைத்த மொழிகளைக் கேட்டுத் தடுமாற்ற மெய்தினளாய், விடையொன்றுங் கூருமல் சாளரத்தைச் சிறிது திறந்து அகழிற்கப்பால் பறக்கும் அம்மணிவாளனது கொடிகளை இளவரசனுக்குக் காட்டினள். இவைகளைக் கருத்தூன்றிப் பார்த்த சித்ராங்கன், "பின் என்? இம்மணிவாள மன்னனையும் நீ சேர்ந்தவளென்றே செப்புகின்றாய்?" என்று நம்பாமற் சிரித்தான்.

"அரசே, மணிவாள மன்னனின் மாமகளை மணத்தல் விட்டுக் கஜேந்திரவிம்மரது புதல்விக்கு மங்கல நாண் கட்டினதற்காக, உன் செருக்கைச் சிதைக்க அப்படை திரண்டு வந்துளது. ஆகையால், அண்ணலே, ஒன்று கேள்........"

"அன்னமே, நீ யாவளென்பதை முன்னமே தெரிவிப்பாய். என்னுடைய செய்தியாவும் அறிந்தவளாய்த் தோன்றுகின்றாய்......" என்று, மணிவாளனது மனநிலை அறிந்துள ஏந்தல் மருட்கையின்றி நகையுற்று அவள்பால் அணுகினன். மந்தாகினியோ, அணுகிவரும் இளவலுக்கு எட்டா தொதுங்கி, "என்னையோ, இறைவ, யாரென வினவுகின்றாய். பெரும்பேர் பெற்றும் சிறுவிதி சேர்ந்த ஒரு பிறவியை என்னிற் கண்டனர் பிறர்......" என்று மந்தாகினி சொல்லிவருகையில், இவ்வார்த்தைகளை முன் னொருபகல் தன் வாய்நின்று வந்துள நினைவெழச் சித்ராங்கன், "மாதே, யான் அன்று ஆடிய கோலக் கூத்தை நீ நின் குவளைக் கண் திறந்து நோக்கியதுண்டோ!" என வியந்தனன்.

"ஆம்"

"மற்று, யாவள் நீ?"

"அந்நாள் இளவரசன் கொள்ளுதற் கிசைந்த கோலத்தின் நாமத்திற் குரியவள்"

"மந்தாகினி?"

"அளியள்"

இதுவரையில் தன்தலை சுமந்திருந்த பெரும்பாரமொன்று நீங்கினற்போல் சித்ராங்கன் பெருமூச்சு விட்டான். முன்தானை நூலெல்லாம் முறுக்கிச் சிவந்த அவள் கைகளைப்பற்றித் தன்கைக்குள் மெல்லவே அமையப் பொருத்தினன். அடக்கிய கையினுள் அவள் விரல்கள் குடைந்துமீறித் தன் முன்தானை நூலிற்கே நாடிச் செல்லக் காந்தார நாட்டிளவரசன் கஜேந்திரவிம்மனின் மாமகள் நின்றாளைக் கூந்தல்வருடிக் குழைதிருத்தி, "வனிதாய், மந்தாகினி, நின்னிலை யத்தனையும் ஊகித்துணர்ந்தேன். நீ இனிக் கூறவேண்டிய தொன்றில்லை. பொன்னே, யானுன்னைப் பராமுகமாய் வருத்திய தீமையெல்லாம் ஏற்றுப் பொலிகின்றாய்—எனக்குத் தகா எந்தப் பிறன் மனையோ நீயென அலைந்திருந்த என்னுள்ளம் கரையேறி உய்ந்தது, காதலி" என்று அவள் விரல்களைத் தன் விரலோடிணைத்துப் பின்னிநின்றான். மந்தாகினியும் அவன் முகம் இனிது நோக்கிப் பேச்சற்ற பேரானந்த நிலையுள் நிற்கப், போர் முரசமொலிக்கின்ற அரவம் இவர் செவிக்கெட்டியது. மந்தாகினி புன்னகை புரிந்தாள். "ஆம், உள்ளும் புறமும் பகை உழக்கப் புதுமணம் விழைவேனைக் கண்டு நகைக்கின்றனையோ, நல்லாய்......நீ பணிப்பையேல் மணிவாளனுடன் இந்நிமிடமே உறவு கொள்கின்றேன்" என்றான் சித்ராங்கன்.

இளவரசனின் குறிப்புணர்ந்த மந்தாகினி, "வாழி வேந்தே, அதுவே யானும் வேண்டுகின்றேன். பின் எனக்கோர் குறையில்லை," என இறைஞ்சினள்.

"ஆருயிரின் உயிரனையாய், நின்தங்கை மாலினியோடின்பம் தழைத்துவாழ இசைவாயோ—உன் பொறுமை அதற்கும் பொருந்துமோ?" என இளவரசன் ஆர்வமுற்றனன்.

கஜேந்திரவிம்மனின் மடமகள் காந்தார நாட்டிளவரசனின் பாதத்தைப் பரிந்து நோக்கினள்.

"ஆயின், அண்டர் கண்டிலா அருநிதியே, என் செல்வி, மேலினிச் செய்வதற்குள கருமம் நனிஉள. இங்ஙனே நீ இரு. அந்தரங்க வழியாலே நான் வெளிச் சென்று காரிய மவ்வளவும் முடித்து வருகின்றேன். விடை தருதியோ?" எனச் சித்ராங்கன் கேட்டான்.

"அரசே, செய்க" என அவள் இயம்பலோடும், இளவரசன் கோமகளை மார்புறத் தழுவி முத்தமிட்டான். அகழ்வாரைத் தாங்கும் புவிமகளேபோல் பொறை வாய்ந்த இம்மாதரசி மந்தாகினியை, இளவரசன் புல்லிய இக்காட்சியைத்தைத்தான், அவ்விஷவாய் வைத்தியன் "மண்மகள் திருமணம்" என்று குரூரமாயேனும் எதிர்பாராது குறித்துளானோ!

அறையின் மற்றோரிடத்தில் சித்ராங்கன் சூத்திரமொன்றை அழுத்தச் சுவரே பிரிந்து சிறிது வழிவிட்டுத் திறந்தது. காதலியின்பால் கண்விடைபெற்று அவ்வழி அவன் ஏகுந்தருணத்தில் மந்தாகினி அவனை நிறுத்தி, "பிறரறியாமல் வெளிச்சென்று பயின்று வருதற்குதவியாய், என் கூறையொன்று அரசே, நீ அணிந்து சென்றாலென்" என்றனளாய்ச் சேலையொன்று அவன் கையளித்து, "மற்று, இக்காரியத்தில் முன்னொருகால் பழகியுமுள்ளாய்," எனப் பரிகாசம் புரிந்தாள்.

மந்தாகினி பரிகசத்தோடளித்த முறுவலால் தனதகமும், சேலையால் தன்புறமும் பொலியப்பெற்ற சித்ராங்கன் அவ்வறைநின்று வெளியாகி ஓர் மறைவிடத்திலிருந்து நோக்க, மதிலைச் சூழவந்த படையுடையார் இகலின்றி உள்நுழைவதைக் கண்டான். அவர்களுக்கிடையே கஜேந்திரவிம்மனும் இருந்ததால் முதலிற் சிறிது மயங்கினனெனினும் பிறகு இவ்வேந்தர் மூவரும் தன்னைக் காக்கும் பொருட்டே வந்துளர் என ஊகித்தான். ஆயினும் அவர் வந்தவண்ணம் யாதெனச் செவ்வனே தேர்வதன்முன் தன்னை வெளியாக்கிக்கொள்ளப் படாதென்னும் புத்தி அவனுக் குண்டாயிற்று. ஆதலால் கோட்டையுள் இவர்கள் சென்று செய்வதை அறிவது அவசியம். இதற்கென் செய்வதென்று திகைப்புற்று நாற்புறமும் நோக்குகையில் சிறிது தூரத்தில் கூடாரமொன்று இவன் கண்ணிற்குத்தென்பட்டது. அவ்விடம் விரைந்து சென்றான். மறுநாள் விஜயதசமி யாகையால், இரத்தினபுரி யுற்றுக் கூத்தாடிப் பிழைக்கும் பொருட்டுப் பயணப்பட்டுள கண்ணுளர் கூட்டம் தங்கிய கூடாரமா யிருந்தது. இளவரசன் அதனுட்சென்று மேலணிந்த சேலையை அவர்களிடம் மாறி, வயோதிக வேஷத்திற்குரிய பொய்த்தாடி

மீசை முதலியனவற்றையும், தாழ்ந்தோர் அங்கியையும் வாங்கி யணிந்துகொண்டு, தன் மாளிகையின் வாயிலண்டை விரைந்தடைந்தான். மதிலின்மீது கஜேந்திரஸிம்மன் தூக்குமரம் நாட்டுவித்துக் கொண்டிருந்த சமயமா யிருந்தது அது. நரபாலனும் வைத்தியனும் கஜேந்திரஸிம்மனின் பக்கத்திலே நிற்பதையும் கண்டானாகையால் இவ்விருவர் பழுப்பதற்கே அம்மரம் வளர்வதென்பதற்கு ஐயமில்லை. பாதகராயினும் இளவரசனின் பேதை மனம் அவர்பாற் பரிந்தது. ஆதலால் நரபாலன் வதையுண்ணாது தடுக்கும்வகை யாதெனச் சித்ராங்கன் யோசித்து அம்மதிலின்மீது ஏற முயல்கின்ற சமயத்தில், விசாரணைக்காகப் பொதுமனிதர் தேடி வெளிப்புறம்வந்த காஷ்மீரத்தாசன், "முதியோய், கொலைக் குற்ற ஆராய்ச்சி யொன்றில் நீதிசொல்ல நின்னுதவி வேண்டுகின்றேன், வருதியோ," என விளித்தனன்.

முன் மந்தாகினியைத் தழுவும்போதும், பின் பொய்வேடம் புனையும்போதும் தன் மாளிகை வாயிலில் நிற்கும் போதும், நரபாலனைத் தூக்குமரத்தருகு காணும் போதும், காஷ்மீரவேந்தன் விளிக்கும் போதும், இளவரசனின் மனத்தின்கண் 'பாண்மகள் யாது ஆயினளோ' என்னும் எண்ணமும் இடைவிடாது உறுத்திக் கொண்டிருந்தது. ஆதலின், இப்பொழுதிவ் விசாரணையில் அவள் சாக்ஷிகூற வருவது அவசியமென்றுணர்ந்து அவளை அங்குக் காணும் ஆவலால் காஷ்மீரத்தாசன் கேட்டதற்குச் சித்ராங்கன் உடன்பட்டனன். அதுவுமல்லாமல், விசாரணையில் நரபாலன் குற்றவாளி என்று ஏற்பட்டபின்னரே அவனைத் தூக்கிலிடுவார்களென்று இளவரசன் எண்ணினது இயற்கையே யாகையால், விசாரணை அவனுக்கு விரோதமாய் முடியாதபடி பார்த்துக்கொள்வதற்கும் கூடுமென்று நினைத்ததும் மதிலின்மீதேறாது காஷ்மீரத்தாசனுடன் போனதற்கு ஒரு காரணமாகும். ஆனால் சித்ராங்கன் நினைத்தது இரண்டும் கைகூடவில்லை. பாண்மகளை அங்குக் கண்டிலன். தன் கொலைக்குத் தானே தீர்ப்புச் சொல்லவும் நேர்ந்தது.

நியாயச்சபை முன்னுரைத்தவாறு கலைந்ததும், பாண்மகளைக்காணாத கோமகன் மிகவருந்திப் "பாண்மகளைத் தேட முயல்வதோ......அவள் மாலினியேதான்...... இன்னுமென்ன ஐயம்! அன்றிலின் அடையாளம் அவளாலன்றி வேறுயாவரால் கூறுதற்கியலும். மந்தாகினியைக் கூடுதற்கே நான் மாளிகை சேர்கின்றேனென் றெண்ணி ஆற்றில் விழுந்தவளும் மணிவாளன் திருமகள் மாலினியல்லளோ! அவளே முயன்றென்னுயிர் இன்று இவ்வேந்தரைக் கொண்டு காத்தாளென்பதும் தெரிகின்றது..... மற்று, அவள் நாயுமன்றே என்னைக் கடையிலும் காப்பாற்றியது. முன் சங்கரமண்டப முன்றிலில் தன் தங்கையும் தோரவதை உருவைக் கரந்திருந்ததுபோலவே இன்றும் செய்துளாள்போலும். இல்லையேல் மணிவாளன் பக்கத்தில் அவள் வாராமற்போவாளோ! எங்குற்றுள் பாவம் அவள்! மாலினியைத் தேடவேண்டும்...... இல்லை.....மந்தாகினி காத்திருப்பாள். அவளிடஞ் சென்று உற்றதை உரைத்தல் வேண்டும்," என்றிவ்வாறு தயிர் கடைவார் கைபோன்ற மனத்தனாகிப் பின், இரண்டு காந்தங்களுக்கிடையே யகப்பட்ட இரும்பென நின்றான். அச்சமயம் கஜேந்திரஸிம்மன், "எனதருமைப் புதல்வி இம்மாளிகையில் இருத்தல் வேண்டும், சென்று பாருங்கள்" என்று சில ஆட்களை ஏவினான். "பாவம், சித்ராங்கன் சிதையுண்டு கிடக்குமிடத்தைத் தேடவேண்டாவா" என்று புறப்பட்டான் காஷ்மீரத்தாசன். "அப்பாண்மகள், மறைந்த இடந்தான் எதுவோ? அவள் குரலாலும் நடையாலும் என் மகளின் நினைவு ஊறுகின்றது ......ஓகோ கொ! இருக்கலாம், இருக்கலாம்! ஆம் ஆம், அம்ம! இல்லையேல் இளவரசற்குப் பரிந்து அவள் இத்துணை சாகசங்கள் செய்வதேன். தேடுங்க ளவளை." என்று மணிவாளனும் சில ஆட்களை அனுப்பினான்.

இதற்கிடையில் சித்ராங்கன் மந்தாகினிமாட்டே அடைந்தனன். அவளிருந்தவறை களவறையாதலால் அதனை ஒருவராலும் கண்டடைய இயலவில்லை. சென்ற இளவரசன் மறுபடி வெளிவர இரவு பத்துநாழிகைக்கு மேல் ஆய்விட்டது. அதற்குள், கஜேந்திரஸிம்மன் மணிவாளன் காஷ்மீரத்தாசன் மூவரும் தாம் தாம் தேடச் சென்றவரொருவரும் அகப்படாததால் இனித்தாழாது அரசனுக் குற்றதை அறிவிக்கவேண்டுமென நினைத்துத் தத்தம் பரிவாரங்களுடன் சித்ரமோகன மாளிகையினின்று மகன்றுவிட்டனர். போரின் களைப்பாலன்றித் தன் மகளைக் காணாத வருத்தத்தால் கஜேந்திரஸிம்மனும், கண்டதன் பெண்ணை மீண்டுமிழந்த துயரால் மணிவாளனும், அரசிளங்குமரனை இழந்த சோகத்தால் அனைவரும் நைந்திருந்ததால், பாதிவழி சென்றதும் சந்திரசேகரர் வாழும் 'சிகரவிலாசம்' தென்பட, அம்மனையில் இரவைக் கழித்துப் பொழுது புலர்ந்ததும் புறப்பட்டு இரத்தினபுரியடைந்து, அங்குப் பெருங்குன்றத் தலைவர் போர் தொடங்குமுன்னரே, அரசனதிழவைத் தெரிவிக்கலா மென்று எண்ணி அம்மனையகம் எய்தி இராப்போது தங்கினர்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

உயிர் தவழும் உடலம்.

கண்ணப்பர் கதையின் உயிர் நிலையைக் கண்டறிந்தோம். உயிரானது தனியே நின்றால் அதனை அறிந்துகொள்பவர் இல்லை. உடலோடு கூடி உலவினால் அல்லவா உயிருண்மை ஒருவாறு விளங்குகின்றது. ஆகவே கதையின் உயிரும் உடலோடுதான் விளங்கவேண்டும். சேக்கிழார் தாம் எடுத்துக்கொண்ட நூலின் முதலிலேயே,

> தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
> பெருவ ரும்சீர் புகலலுற் றேன்முற்ற

என்று நுதலிப் புகுகின்றார் ஆதலினால் கதை முழுதினையும் முதலே தொடங்கி முடிவேவரை கூறிக் கொண்டு போகின்றார். பிறப்பு வளர்ப்பெல்லாம் பேசுகின்றார். முடிவு நிலையைமட்டும் புகழ்ந்து முடித்து விடுவது இவரது போக்கல்ல. நமது கதையைப் பொறுத்தவரையில் நாடு நகரம் தாய் தந்தைகளின் பெயர், இவற்றை எல்லாம் சுருக்கமாக ஒரு வெண்பாவில் நக்கீரர் பாடியுள்ளனர் எனப் பதினோராந் திருமுறையினின்றும் அறிகின்றோம்.

> தத்தைதா யாம்தந்தை நாகனும் தன்பிறப்புப்
> பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனும்—தித்திக்கும்
> திண்ணப்ப னும்சிறுபேர் செய்தவத்தால் காளத்திக்
> கண்ணப்ப னாய்நின்றான் காண்.

என்பது அத்திருப்பாடல். மற்றைய கதையினைத் திருவருட் சிறப்பால் சேக்கிழாரே விரிவாகப் பாடுகின்றார்.

கதையில் உயிர்நிலையாக எதனைக்கண்டாரோ அதற்கேற்ப மற்றைய வரலாறுகளாகிய உறுப்புக்களையும், உடலையும், உருப்படுத்தித் தமது படைப்புத் தொழிலைச் செவ்வனே நடத்துகின்றார். சேக்கிழார் பெருமான் கண்ணப்பரது அன்பின் பெருக்கைப் புகழ்ந்து பேசுவதற்காகவே மற்றையவற்றையும் வளர்த்திப் பாடிப் போகின்றார். அதனால் அல்லவா கண்ணப்பர் கதை முழுவதும் ஒன்றாக உருண்டு திரண்டு ஓர்முகப்பட்டு ஒரு சுவையுடன் விளங்குகிறது. முன்னைய நிலையில் கண்ணப்பர் எவ்வளவு சீரும் சிறப்புமாக வளர்ந்தார் என அறிகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு அவர் நின்ற பின்னைய நிலையின் அருமை தெளிவாகின்றது.

அவர் பிறந்த நாட்டினையும் நகரத்தினையும் பற்றி என்ன கூறுகின்றார் சேக்கிழார்? நக்கீரரோ கண்ணப்பர் வாழ்ந்த நாடு பாலை என்கின்றார். காலை வைத்தாலும் சுறீல் என அண்டிப் பற்றிக்கொள்ளும் மணற்காடு என்கின்றார். அத்தகைய இடத்தில் என்ன விளையப்போகின்றது? விலங்குகளைத்தான் அடித்துப் பிடித்து முறித்து உரித்துத் தேய்த்துத் தீய்த்துத் தின்ன வேண்டும். கண்ணப்பரது கொலை நிலையைப் புனைந்துரைத்து அதனோடு அவரது அன்பு நிலையையும் ஒக்கவைத்துப் புகழ்ந்துரைக்க வேண்டி நக்கீரர் அவ்வாறு கூறுகின்றார். கொலையாளி வாழும் கொடுநில மாதலின் அதனை ஒருமுறை எண்ணினாலும் என்றைக்கும் மனதைச் சுட்டெரிக்கும் பாலைக்காடாக அதனை இழித் துரைக்கின்றார். கொடுமையைப் புனைந்துரைப்பதற்கு அந்நிலத்தினியல்பு பக்கத் துணையாகின்றது. ஆனால் சேக்கிழார் கொலை நிலையைப் புனைந்துரைக்க வருகின்றார் அல்லர். முன்னைய நிலையாகிய செல்வ நிலையையே சிறப்பித்துரைக்க வருகின்றாராதலின் அதற்கேற்ப அந்நாட்டை எல்லாவளனும் நிறைந்ததாகவே புகழ்கின்றனர். பாலையைக் குறிஞ்சியாக்கினர். மணற்காட்டை மலைநாடாக்கினர். செல்வமும் சிறப்பும் பெற்றுச் செழிப்புற்றோங்கும் மலை நாடாகும் திண்ணனார் வாழ்ந்தநாடு. "குன்றவர் அதனின் வாழ்வார்" என்றும் 'குறிச்சிவாழ்க்கை' என்றும், "மலையுறை மாக்கள்" என்றும் "குறவர் சீறூர்" என்றும் கூறிப்போதலைக் காண்க. முதற் செய்யுளிலேயே தமது குறிப்பை விளக்கியருளுகின்றார் சேக்கிழார்.

> மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
> காவலர் திருக்கா ளத்தி கண்ணப்பர் திருநா டென்பர்
> நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற
> பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு.

இனி நகரத்தைப் புகழ்வந்தவரும் அவ்வாறுதான் கூறிப் போகின்றார். சுடச்சுடக் கொதித்துக் காலைப்பற்றிக்கொள்ளும் மணற்காடல்ல இவர் கூறுவது. அதற்கு மாறாகப் புனைந்துரைக்கப் புகுந்தவர் இதற்கேற்ப நீர்வளத்தையே வற்புறுத்துகின்றார். மேலே "பூவலர் வாவி சோலை" என்றார், இங்கே அருவிகள் சூழ்ந்த ஊர் என்கின்றார்.

> இத்திரு நாடு தன்னில் இவர்திருப் பதியா தென்னில்
> நித்தில அருவிச் சாரல் நீள்வரை சூழ்ந்த பாங்கர்
> மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்றொடர் வேலி கோலி
> ஒத்தபேர் அரணம் சூழ்ந்த முதுபதி உடுப்பூர் ஆகும்.

நக்கீரர் புகழும்காட்டில் நடமாடுகின்றவர்களே இல்லை என்பதுபோல் அந்நூலைப் படிக்கும் போது தோன்றுகின்றது. ஆனால் சேக்கிழார் நாடோ நத்தப்பாழல்ல. செல்வமும் சீரும்பெற்ற நாட்டைத் தேடிக்கொண்டு வந்து எத்துணைபேர்குடியேறுவார்கள். எப்போதும் அவ்வூர் களரியாகவே இருக்கும். வேடர்கள் கூட்டம் கூட்டமாக ஒருவரோடு ஒருவர் சிலபோது சினந்தும் சிலபோதுவிளையாடியும் வருவதால் எழும் பேரொலிபற்றி அவ்வூர் அல்லோலகல்லோலமாய் இருப்பதுபோல்தோன்றும். செல்வம் மிகுதியும் உடையவர்களாதலினால் எப்போதும் வயிறே நினைவாக உழைக்க வேண்டுவதில்லை. வெற்றி வேண்டியும் புகழ்வேண்டியும் விளையாட்டாகப் பிறர்நாடுகள்மேல் படை எடுத்துச் செல்வர். மாற்றாரை முறியடித்து வெற்றிபெறுவர். ஒன்றுபோல ஒன்றிராது வெவ்வேறுவகையில் அழகுபெற்று விளங்கும் ஆவினங்களைத் தெரிந்தெடுத்துத் தமக்கெனப்பிரித்து அவ்வூரினின்றும் தம்மூர்க்கு ஓட்டிக்கொண்டு வருவார்கள். அவற்றை மந்தை மந்தையாக எங்கும் மேயவிட்டு அருமையாக வளர்ப்பார்கள். தைத்தினி தின்றுகொழுத்துக் களித்துத் திரியும் யானைகளும் எங்கும் காணலாம். அவைகள் பிளிறுமானால் இடிஇடிப்பது போலிருக்கும். இவர்கள் கையில் அவ்வாறு தின்று கொழுத்துத் தேட வேண்டுவ தொன்று மின்றித் திரியும். இவர்கள் தங்களது வேலை முடிந்ததும் வலையைத் தங்கள் முற்றத்தில் உள்ள விளா மரத்தின் கிளையிலே பரக்கக் கட்டிக் காற்றார விடுவார்கள். வேட்டை நாயினையும் அவ்விளாமரத்தில் கட்டிவைப்பார்கள். மாதர்களோ மலை நெல்லை முற்றத்தில் கொட்டிப் பரப்பி வெய்யிலில் உலர்த்துவார்கள். எங்கேபார்த்தாலும் நெல்லாகவே தோன்றும், அத்துணைச் செழுமிய நாடு அந்த மலைநாடு. மானைக்காட்டி மானைப்பிடித்தல் வழக்கமாதலின் அதற்கிணங்கப் பழகிய விலங்குகளைக் கொண்டு புதிய விலங்குகளை அகப்படுத்திக் கொள்ளவும், இவர்களோடு விளையாடவும் வேண்டிப்பிடித்துப் பழகிய பன்றியும் புலியும் கரடியும் கடமானும் ஓடியாடி இவர்களோடு விளையாடும். ஓய்வுவேளையில் இவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பாட்டுப்பாடி ஆட்டம் ஆடுவர். இவர்களது ஊது குழலில் எழும் இன்னிசையையும் இப்பாட்டிற் கேற்பக் கொட்டும் உடுக்கையையும் எப்போதும் அவ்வூரில் கேட்கலாம். இவர்களுக் கெதிரில் அருவிகள் கல்லென்று ஒலித்துக் கொண்டு கல்லில் தாவிக்குதித்து ஓடிவருவது கேட்பதற்கு இனிமையாய்க் காண்பதற்கு அழகாய் இருக்கும்.

நக்கீரரது நாட்டில் நாயும் நரியுந்தான் திரியும்; ஓநாயும் செந்நாயுந்தான் ஓடி அலையும். சேக்கிழாரது நாட்டிலோ எல்லோரும் கூடி இன்பமாக வாழ்வர். உற்றாரும் உறவினருமாய் ஒன்றுகூடி ஒருவரோடு ஒருவர் உடலும் உயிரும்போலக் கலந்து வாழ்வர். அன்பின் திருக்கதையைக் கூறவந்த சேக்கிழார் அதைக் குறிப்பாகக் காட்ட அங்கு அன்பு ததும்புவதை முதலிலேயே புகழ்கின்றார். சிறுபிள்ளைகள் புலிக்குட்டியோடும் யானைக்கன்றுகளோடும்சேர்ந்துவிளையாடி இன்புறுவர். சிறுமியரோ பெண் மான்களோடு விளையாடுவர். மானினங்கள் அந்தப் பெண்களிடத்தே அன்போடு அவர்களைக் கண்டதும் ஓடிவந்து மகிழ்ந்து வாழும். அக்குடியிற் பிறந்த சிறுவர்களே இவ்வளவு அன்பாகக் கொடிய விலங்குகளையும் பாராட்டுவார்களானால் அவ்வூரார் தமது இளவரசனை எவ்வளவு அன்பாகப் பாராட்டி இருப்பார்கள்?

> குன்றவர் அதனில் வாழ்வார்
> கொடுஞ்செவி ஞமலி ஆர்த்த
> வன்றிரள் விளவின் கோட்டு
> வார்வலை மருங்கு தூங்கப்
> பன்றியும் புலியும் எண்கும்
> கடமையும் மானின் பார்வை

அன்றியும் பாறை முன்றில்
ஐவனம் உணங்கும் எங்கும்.

வன்புலிக் குருளை யோடும்
வயக்கரிக் கன்றி னோடும்
புன்தலைச் சிறும கார்கள்
புரிந்துடன் ஆடல் அன்றி
அன்புறு காதல் கூற
அணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி யாடும்
எயிற்றியர் மகளிர் எங்கும்.

வெல்படைத் தறுகண் வெஞ்சொல்
வேட்டுவர் கூட்டந் தோறும்
'கொல்' 'எறி' 'குத்து' என் றார்த்துக்
குழுமிய ஓசை அன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும்
சிறுகணை குளியும் கூடிக்
'கல்'எனும் ஒலியின் மேலும்
கறங்கிசை அருவி எங்கும்.

ஆறலைத் துண்ணும் வேடர்
அயற்புலம் கவர்ந்து கொண்ட
வேறுபல் உருவின் மிக்கு
விரவும்ஆன் நிரைகள் அன்றி
ஏறுடை வானந் தன்னில்
இடிக்குரல் எழிலி யோடும்
மாறுகொள் முழக்கங் காட்டும்
மதக்கைமா நிரைகள் எங்கும்.

இவர் பிறந்த ஊர் இத்தகையதானால் இவர் பிறந்த குடி எத்தகையது? அந்தக் குன்றக் குறவர்கள் அனைவரும் எவன் அரசனோ அவனது குடியிற் பிறந்தார் திண்ணனார். நாகன் என்பவன் அந்தக் குன்றவர்களுக் கெல்லாம் தனிப்பெருந் தலைவன். அரசர்க்கரசன். இவனுக்கு அடங்கிப் பல சிற்றரசர்கள் ஆண்டு வந்தார்கள். திண்ணனுருக்கு வில் பயிற்றப்போவது கேட்டு எல்லோரும் பற்பல வகையான பொருள்களை அனுப்பிவைத்ததைக் கூற வந்த சேக்கிழார் நாகனை "வேடர்தங் கோமான் நாகன்" என்றும் மற்றையவர்களை "மாடுயர் மலைக ளாளும் மறக்குலத் தலைவர்" என்றும் வேறுபிரித் துரைக்கின்றார். இதிலிருந்துமே, நாகன் மலையரசர்களுக்கு எல்லாம் தலைமை பூண்ட வேடர்கோமான் என்பது தெளிவாகின்றது. நாகனது மனைவி தத்தை என்பவள். அவளோ பழைமையாய்ப் பெயர்பெற்றதொரு வேடர் குடியிற் பிறந்த பெண். " அரும் பெறன் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தாள் " என்கின்றார் சேக்கிழார். மணமாவதற்கு முன்னர் இவளும் பேரரசியாக வாழ்ந்தனள் போலும். இவ்விருவரது திருமணத்தால் இரண்டு பெரிய வல்லரசுகளும் ஒன்றாயின என எண்ண இடமுண்டு. இணைந்து ஒன்றாகிய பேரரசு எத்துணை பெருமையுடையதாகும். அவள் எவ்வளவு சீர்மையாக வளர்ந்திருப்பாள். அதற்கேற்ப அரசர்க்கரசனையும் மணந்தாள். இவ்விருவருக்கும் பிறந்தபிள்ளை எவ்வளவு செல்வமாக வளர்ந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ ?

இவ்விருவருக்கும் எல்லாச் செல்வங்களும் நிறைந்திருந்தும் இவர்களது மனதில் ஒரு குறைமட்டும் புகுந்து கொண்டு இவர்களை வாட்டியது. தமக்குப் பின்னால் தமது பெயரை நிலைநிறுத்த பிள்ளை ஒன்று இல்லையே என்று கலங்கினார்கள். இவ்விருவரையும் முதுமையும் நெருங்கத்தொடங்கியது. 'இனிஎது பிள்ளை பிறப்பது' என எல்லோரும் எங்கினார்கள். இவர்களுக்கும் பிள்ளை பெறவேண்டும் என்ற பித்தே பெரிதாய்விட்டது. நாள்தோறும் தமது குடிக்குத் தனிப்பெருங் கடவுளாகிய முருகப்பெருமானது திருக்கோயிலுக்குப்போய் தமது குறையை வாய்விட்டுக் கூறிமுறையிட்டார்கள். தமது குறைநிறை வேறினால் திருக்கோயிலுக்கு வந்து சிறப்புச் செய்வதாகவும் சொல்லிக் கொண்டார்கள். சேவற்கோழியைச் சுற்றிவிட்டார்கள். மயில்களைச் சுற்றிவிட்டார்கள். எங்குப்பார்த்தாலும் மணிகள் இழைத்த தோரணங்கள்கட்டி இடைஇடையே முருகனுக்கு உவந்த கடம்பமாலையும் தொங்கவிட்டுத் திருவிழாச் செய்தனர். குறவர் எல்லாம் கூடிக் குரவைக்கூத் தாடினர். வள்ளிக்கூத்துமாடினர். அவ்வாறு ஆடினவர்கள்மேல் முருகன் வெளிவந்து அவ்விருவருக்கும் அருள் செய்தார்.

பொருவருஞ் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவரும் கூற
அதற்படு காத லாலே
முருகலர் அலங்கற் செவ்வேள்
முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியி னிற்பார்.

வாரணச் சேவலோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பணி கதம்ப நாற்றி
பேரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை.

பயில்வடுப் பொலிந்த யாக்கை
வேடர்தம் பதியா நாகற்
கெயிலுடைப் புரங்கள் செற்ற
எந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கொற்ற ஊர்தி
வரையுரம் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளி னாலே.

தத்தையும் கருவடைந்தாள். அரசனும் அரசியும் கடவுளுக்குச்செய்த சிறப்புச் சொல்லத் தரமல்ல. கருவானது கடவுளது அருளால் வளர்ந்து முற்றவேண்டி எந்நாளும் பலியிடுவதும் வேலனைக்கொண்டு வெறியாடுவதும் முருகனது திருவருளை அவ்வகையாகத் தெரிந்து கொள்வதுமாக இருந்தார்கள். அவ்வப்போது செய்ய வேண்டிய கடன்களையும் தவறாது தக்க காலத்தே செவ்வையாகச் செய்துவந்தார்கள். பத்துத் திங்களும் நிரம்பின. உப்புக் கடலில் ஒளிபெருகிய திங்கள் தோன்றியதுபோலத் தத்தைவயிற்றிலே ஒப்புயர் வற்றவோர் குழவி பிறந்தது.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 33.

நள வெண்பா

(630-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்

மனைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேனால்—நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர் நாடா
இவளைப் பணையந்தா வின்று. 49.

பதப்பிரிவு:— மனைக்கு உரியார் அன்றே வரும் துயரம் தீர்ப்பார் சினை சங்கின் வெண் தலையை தேனால் நனைக்கும் குவளை பணை பை தாள் குண்டு நீர் நாடா இவளை பணையம் தா இன்று.

அன்வயம்:— சினைச் சங்கின் வெண்தலையைத் தேனால் நனைக்கும் குவளைப் பணைப்பைந்தாள் குண்டு நீர்நாடா, வரும் துயரம் தீர்ப்பார் மனைக்கு உரியார் அன்று. (ஆதலால்) இன்று இவளைப் பணையம் தா.

கருத்து:—யாவையு மிழந்து இனிப் பந்தயத்திற்குப் பொருளில்லாது ஏங்கிய நளனுக்குப் புட்கரன் அருகிருந்த தமயந்தியைக் காட்டி, "இவளைப் பந்தயமாக வை," என்று கேட்டான்.

பதவுரை.

சினை - சூல் கொண்ட
சங்கின் - சங்கினது
வெள் - வெண்மையான
தலையை - தலையை
தேனால் - தேனினால்
நனைக்கும் - நனைக்கின்ற
குவளை - குவளைகளினது
பணை - பருத்த
பை - பசுமையான
தாள் - தண்டுகளடர்ந்த
குண்டு - ஆழமான
நீர் - நீர் நிலைகளையுடைய
நாடா - நிடதநாட்டோனே,
வரும் - ஒருவனுக்கு வந்த
துயரம் - துன்பத்தை
தீர்ப்பார் - தீர்க்கின்றவர்கள்
மனைக்கு - வீட்டிற்கு
உரியார் - உரியவர்களாகிய மனைவியர்
அன்றே - அல்லர் (ஆகையால்)
இவளை - இந்தத் தமயந்தியை
இன்று - இப்பொழுது
பணையம் - பந்தயமாக
தா - கொடுத்துவிடு.

விளக்கம் :—புட்கரன் நளனை என்னவென் றழைக்கின்றான் ? நாடா - நாட்டையுடையவனே. எப்படிப்பட்ட நாடா ? நீர் நாடா - நீர்நிலைக ளுள்ள நாடனே. எப்படிப்பட்ட நீர்நிலைகள் ? குண்டுநீர் - ஆழமான நீர் நிலைகள். எதை உடைய குண்டுநீர் ? தாள் குண்டுநீர் - தண்டுகளையுடைய ஆழமான நீர்நிலைகள். எப்படிப்பட்ட தாள் ? பைந்தாள் - பசுமையான தண்டுகள். இன்னுமெப்படிப்பட்டவை அத்தண்டுகள் ? பணைப்பைந்தாள் - பருத்த பசுமையான தண்டுகள். எதனுடைய பருத்த பசுமையான தண்டுகள் ? குவளைப் பணைப் பைந்தாள் - குவளைகளினது பருத்த பசுமையான தண்டுகள். என்ன செய்யும் குவளைகளினது பருத்த பசுமையான தண்டுகள் ? நனைக்கும் குவளை - நனைக்கின்ற குவளை. எதனால் நனைக்கும் ? தேனால். எதைத் தேனால் நனைக்கும் ? தலையைத் தேனால் நனைக்கும். எதன் தலையை ? சங்கின் தலையை. எப்படிப்பட்ட சங்கின் தலையை ? வெண் சங்கின் தலையை. அச்சங்கு எப்படிப்பட்டது ? சினைச் சங்கு - சூல் கொண்ட சங்கு.

சூல்கொண்ட சங்குகளின் வெண்மையான தலையைத் தன்னின்று வழியும் தேனினால் நனைக்கின்ற குவளைகளின் பருத்த பசுமையான தண்டுகளடர்ந்த ஆழமான நீர்நிலைகளை யுடையவனே, என்று புட்கரன் நளனை அழைத்து என்ன சொல்கிறான் ? தா - கொடு, என்று கேட்கின்றான். யாரைத் தா? இவளைத் தா - இங்கிருக்கின்ற தமயந்தியைக் கொடு. எப்பொழுது ? இன்று - இப்பொழுது. இப்பொழுது இவளை எதுவாகக் கொடு ? பணையம் தா- பந்தயமாகக் கொடு.

என் அவளையும் பந்தயம் வைத்து நளன் தோற்றுவிட வேண்டுமாம் ? அன்று - அல்லர் ஆகையால். என்ன அல்லர். தீர்ப்பார் அன்று - தீர்ப்பவர் அல்லர். எதைத் தீர்ப்பார் அல்லர் ? துயர் தீர்ப்பார் அன்று. எந்தத் துயரம் தீர்ப்பார் அல்லர் ? வரும்துயரம் தீர்ப்பார் அல்லர் - கணவனுக்குவந்த துன்பத்தைத் தீர்ப்பவர்களல்லர். யார் வரும்துயரம் தீர்ப்பார் அல்லர் ? மனைக்கு உரியார் - மனைவியர்.

விரிவுரை :—இச்செய்யுளின் முதலடிக்கு, "மனைவிகள் வருகின்ற துயரத்தைத் தீர்ப்பவர்கள் ஆவார், ஆதலால் தமயந்தியை நான் அடையுமாறு அவளைப் பணையம்கொடு" என்று பொருள்கூறுவார் பிறர். இப்பொருள் பொருத்தமுடைய தன்று எனத் தோன்றுகின்றது. எவ்வளவுதான் கொடியவனாகப் புட்கரன் இருந்தாலும், "உன்மனைவியை எனக்கு மனைவியாகக் கொடு" என்று நளனையே கேட்டானெனல் தகவற்றதாகும். அதுவுமன்றி, அவளால் இன்பம் எய்துவதற்கு என்று கேட்காமல் துயரம் தீர்வதற்கென்று கேட்பானேன். அரசெலாம் சூதினால் வென்று களிக்கின்ற புட்கரன்தனக்கு இப்பொழுது தீரவேண்டிய துயர் எத்துயருளது ? அன்றே, என்பதை அல்லரோ, என்று பொருள்படுத்தி மனைக்குரியார் என்பதுடன் சேர்ப்பதால் இவ்வர்த்தம்வரும். இவ்வாறன்றி, 'உண்டு' என்ற சொல்லைப்போல் 'அன்று' என்னுஞ் சொல்லும் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும்வரும் குறிப்பு வினை முற்றாதலால், "மனைக்குரியார் வருந்துயரம் தீர்ப்பார் அல்லர்" என்று அதனைத் தீர்ப்பார் என்னும் வினையாலணையும்பெயரோடு சேர்த்துக்கொண்டு, ஏகார இடைச்சொல்லைத் தேற்றப்பொருளில் வந்ததாக வைத்தால், முன் சொன்னபடி அர்த்தத்தின் பொருத்தம் பிறழாமல் காக்கப்படும். இப்பொருளில் அடங்கிய கருத்து "நளனே, நீ நாடு நகரமெல்லாம் இழந்து துன்பம் அடைந்தாய். இந்தக் கஷ்டகாலத்தில் மனைவியும் உன்னோடு கூட இருப்பது நல்லதல்ல. ஆதலால் அவளையும் கொடுத்துவிடு" என்று விரியும். என்ன காரணம் பற்றிக் கஷ்டகாலத்தில் மனைவியும் கூட இருப்பது நல்லதல்லவென்று புட்கரன் உரைக்கின்றான் என்பது வெளிப்படையாயில்லை. 'வரும்துயரம் தீர்ப்பவர் மனைவியர் அல்லர்,' என்றதில் அத்துயரத்தை அவர் மேன்மேலும் தூண்டிக் கொண்டிருப்பர் என்னும் குறிப்பு இருக்கின்றது. "உன்னாலே யல்லவோ இவ்விடுக்கண் எமக்கு வந்

தது" 'என்று அடிக்கடி இடித்துரைத்துக் கொண்டே மனைவியர் இருத்தலும் கூடும். இது உத்தம மாதர்களுக்குப் பொருந்தா தென்பது உண்மையே. ஆனால் புட்காக்கயவனது புத்திக்குத் தோன்ற வேண்டியதே தோன்றுவது இயற்கையுமாகும். அல்லது அவன் உயர்ந்த நோக்கத்தாலும் "துன்பம் வந்தகாலையில் மனைவியர் உடனிருந்தால் அத்துன்பம் தீராவகை மேன்மேலும் விளைவிப்பார்" என்று கூறியுமிருக்கலாம். துன்பமுற்ற கணவனுக்குத் தன்னோடுசேர்ந்து மனைவியும் துயருறக் காணுந்தோறும், அவன் துயர் அதிகரிக்கும். பின்வரும் 56-வது செய்யுளில் இதற்கு ஆதாரமும் இருக்கின்றது. அன்றியும் மதியிழந்து தானாடிய சூதினால் அவளும் கஷ்டப்பட வேண்டியிருக்கிற தென்றால் உற்ற துயர் பின்னுமதிகம். ஆதலால், "என் துயர் தீர்ப்பதற்கு இவளைத் தா," என்பதைவிட "உன் துயர் இவளிருக்கத் தீராதாகையால், கொடுத்துவிடு" என்று புட்கரன் கூறுவதே அமையும். இருவகையிலும் பிறன் மனையைக் கேட்கின்ற இழிவு எஞ்சியே நிற்கின்றது.

நைடதத்திலுபோ லல்லாமல், புகழேந்தி சூதாடுமிடத்தில் தமயந்தி இருக்கும்படி செய்ததின் நயம் பாராட்டத்தக்கது. அருகிருந்து சூதாடுகின்றதைப் பார்த்திருந்தாளாலும் தன் நாயகன் தனக்குக் கடவுளாதலால் அவன் செய்வதற்கு எதிராக ஒன்றுஞ் செப்பாது உடன்பட்ட கற்புடைய மாதரசி தமயந்தி என்று காட்டுவதற்கேபோலும் புகழேந்தி இவ்வாறு அமைத்தது. 'நலம் வருக தீதுவருக சிந்தையால் சூதுபொர இசைந்து சொல்லினேம்,' என்று நளன் சொன்னபிறகு தமயந்தியும், நலம்வரினும் தீதுவரினும் அதற்குட்படுவதே முறையெனக் கொண்டனள். தொழுநோய் கொண்ட கணவனை வேசி வீட்டிற்குக் கொண்டு போய்விட்ட நளாயினியின் கற்பும் இத்தரத்ததாம். பாம்பின் வாய்ப்பட்டுப் புலம்பும்போது தமயந்தியின் கற்புநிலை வைபவத்தைப் பின் பூரணமாகக் காண்போம்.

இனிச்சூ தொழிந்தோ மினவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனனாடன் பொன்மகளே
நாம்போது மென்றா னளன். 50.

பொழிப்புரை: (தமயந்தியைத் தரும்படி புட்கரன் கேட்க உடனே) நளன் (தமயந்தியைப்பார்த்து) "இனி இந்தச்சூதாட்டத்தை விட்டோம். கனிகள் நிறைந்த மாமரச்சோலையிலே வண்டின் கூட்டங்கள் குளிர்ச்சி பொருந்திய மாம்பூவைக் காலால் கிண்டித் திறக்கும் நீர்வளமிகுந்த விதர்ப்ப நாடுடையவனின் அழகியமகளே, நாம் போவோம் வா," என்றான்.

விரிவுரை:—சூதாடித் தோற்றுக் காட்டிலே தம்கடவநாள் கழித்திருந்த பாண்டவர்களுள் தருமனுக்கு வியாசர், "சூதாடிக் கேடு எய்துவது, அரசர்களுக்கு இயல்பே, ஆதலால் நீகலங்கவேண்டா" என, அப்போது தருமன் தன் போன்று கவறாடித் தீதுற்ற வேந்தன் வேறொருவன் உண்டோ என்று வியந்ததற்கு வியாசர் உண்டு என்று நளன் சரித்திரத்தை எடுத்துச் சொல்கின்றார். ஆகையால் நாம் படிக்கின்ற இந்நூலிலுள்ள தோன்றும் கவிக்கூற்று அல்ல வென்று ஒரு விதத்தில் சொல்லலாம். வியாசர் சொல்லத் தருமர் கேட்பதுபோல் புகழேந்தி அமைத்திருக்கின்றார்.

ஆகையால் 'இனிச் சூது ஒழிந்தோம்' என நளன் சொன்னதாக வியாசர் கூறிய இச்சொற்கள் தருமனின் மனதில் முள்ளைப்போல் தைத்திருக்கும். மதி சிறிது இழந்துபோய் நளன் சூதிலே மோகங்கொண்டு ஆடினாலும், மனைவிமேல் அவனுக்கு மெய்யான காதல் இருந்ததால், அவளைத் தா என்று கேட்டதும், புத்திதெளிந்து சூதாட்டத்தை நிறுத்தி விட்டான். தருமனோ, தங்களையே அல்லாமல் தம் மனைவியையும் பணயமாய் வைத்திழந்தானாகலால், இருவரும் ஆடியது சூதே எனினும் அச்சூதிலும் தன் சிறுமை தோன்றச் சிந்தை உழன்றிருத்தல் சகஜமே.

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகங் கொள்ளத்தான் போனாற்போல்—தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினா னன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. 51.

பதவுரை.

மென் - மெல்லிய
கால் - கால்களையும்
சிறை - இறகுகளையும் உடைய
அன்னம் - ஓர் அன்னப்பறவை ஆனது
வீற்று இருந்த - பெருமையோடு அமர்ந்திருந்த
மென் - மிருதுவான
மலரை - தாமரைமலரை
புன் - அற்பமாகிய
காகம் - காகமானது
கொள்ள - அடையும்படி
தான் - அவ்வன்னம்
போனாற்போல் - மலரைவிட்டு நீங்கியதுபோல்நளன்
கொடியானுக்கு - கொடியவனாகிய புட்கரனுக்கு
அ - அந்த
பார் - பூமியை
கொடுத்து - கொடுத்துவிட்டு
அன்றே - அப்பொழுதே
தன் - தன்னுடைய
கால் - கால்கள்
பொடி - தெருப்புழுதி
ஆட - படிந்துகொள்ள
தேவியொடும் - மனைவியாகிய தமயந்தியோடும்
போயினான் - போனான்.

விரிவுரை:—மெய்ம்மை நளன்; ஆதலால் ஆடியது சூதானாலும் அதனிற் கொடுத்த வாக்கையும் காத்துத் தோற்ற நாடெலாம் புட்கரனுக்குக் கொடுத்துவிட்டான். "தோற்றாலுமென்ன! விளையாட்டுச் சூதில் நீடத நாட்டையே கொடுத்துவிடுகின்ற மதியிலி நான் அல்லன், தரமாட்டேன்!" என்று நளன் சொல்லி யிருப்பானானால் புட்கரனால் என்ன செய்திருக்க முடியும். வழக்கெடுக்க இடமில்லை, எடுப்பினுஞ் செல்லாது. போர் தொடுக்கு மாற்றல் நளினிற்கு எதிரே அவனுக்கு இலது. ஆதலால், சொன்ன சொல்லைக் கடைபிடிக்க நளனுக்குப் புறத்திலிருந்து எவ்விதத் தூண்டுதலும் இல்லை. அகத்தில் நின்ற அறத்தின் பற்றினால் அவன் மேற்கொண்ட வாய்மையே வாய்மை.

இச்செய்யுளில் அடங்கிய உபமான உபமேயங்கள் வெளிப்படை. நளனாண்ட நாட்டைத் தகுதியற்ற புட்கரன் ஆள்வதென்றால், அன்னம் இருந்தகன்றபின் தாமரையில் சென்று உட்காரும் காகத்தைப்போல், அவனுடைய புன்புத்திக்கும் பார்ப்பவர் பரிகசத்திற்கும், இதுவொன்றே போதும்.

சிவகாமி சரித ஆராய்ச்சி.

[632 - வது பக்கத் தொடர்ச்சி]

"மௌன தவமுனிவ! தெய்வமொடு தாங்கள் வதியும் இத்திருக்கோயில் புகுந்த தீவினையேன் செய்தபிழை செமித்தருள்வை! என் உளத்திருப்பதை யோதுமாறு தாங்கள் பணித்ததினால் என் வரலாறு இன்னதெனச் சொல்லுகின்றேன், செவிசாய்த் தருள் வீராக! இம்மண்ணுலகில் காவிரிப்பூம் பட்டினத்தில் செல்வத்திற் சிறந்த வணிககுலத்துத் திலகமென ஒருமங்கை வாழ்ந்து வந்தாள். எண்ணரிய குணமுடையாள். இவள் வயிற்றில் உதித்தோர் மூவர். அவர்களில் இருவர் மகளிர், ஒருவர் புருடர். ஒப்புச் சொல்லுவதற்கரிய மேன்மைவாய்ந்த இப் புருடர்க்கு ஒரு புதல்வர் உதித்தார். முன்சொன்ன இரு பெண்களில் ஒருத்தி மகள் யான் பாவி, ஒருத்தி முழு மலடியா யிருந்தாள். அம்மலடிக்குச் செல்வம் மிகுந்திருந்தது. என் அம்மானுடைய புதல்வருடன் உடலைவிட்டுப் பிரியாத நிழல்போல யான்கூடி விளையாடி யொன்றாக வளர்ந்தேன். அவர் வீரமிக்கவர்; அருள் நிறைந்த உள்ளத்தார்; அழகு மிக்க வடிவுடையவர்; அவருடைய திருநாமம் அறைவேனோ அடிகாள்"! என்று கூறிக்கொண்டே வந்தவள், தன்னை மறந்து இடை தள்ளாடிக் காம் பொடிந்த கொடிபோல் ஒசியலாகினாள்.

துறவிகள் வசிக்குமிடம் மிகத் தூயதாதலால், இறைவன் எங்கும் நிறைந்திருப்பவனாயினும் தூய இடத்தில் மிக்கு விளங்குதல் நோக்கித் "தெய்வமொடு நீ வசிக்குந் திருக்கோயில்" என்று அவ்விருடி வசிக்குமிடத்தை விசேடிக்கிறார். காதலர் ஒருவரையொருவர் ஒருகணமும் பிரிய உடன்படா ராதலால் அவ்வியல்பு நோக்கி, "உடல்பிரியா நிழல்போல்" என்றார். தமிழ்நாட்டு மங்கையர்கள் தங்கள் நாயகரின் பெயரை மறந்தும் இயம்பாராதலின், "அவருடைய திருநாமம் அறைவேனோ அடிகாள்" என்று நம்நாட்டு வழக்கத்தை நிலைநிறுத்துகிறார்.

இவ்வாறு உரைத்துக்கொண்டு வந்ததைக்கேட்ட இருடி உடல் புளகாங்கித மெய்தி, விழியில் பெருகிய நீர் வதனம் ஒழுகியோட, அதை அப்பெண் அறியாவண்ணம் ஒளிப்பான்வேண்டி எரிக்க விறகெடுப்பவன்போல் எழுந்து அங்குமிங்கும் நடக்கலானான். இளம்பிடியன்னாளும் தன் கதையை முன் விடுத்ததினின்றும் தொடுத்து எடுத்தாள்.

"என் சிறிய தாயாகிய மலடியும், அவளுடைய செல்வ முழுவதும் ஒருங்கே மடமகளென எனக்கு அளித்தாள். அதனால் நான் அச்செல்வத்தில் மயங்கித் தலைதடுமாறித் தமியளாகிய எனது நிலைமையையும்,தலைவன் எனுந் தன்மையையும் மறந்தேன். என் நாயகர் என் தவறுதலைக் குறிப்பாய் உள்ளுணர்த்தியும் யான் கொள்ளாது விடுத்தேன். குறும்பு மதியால் எனது குடிமுழுதும் கெடுத்தேன். இந்நிலைமையைக் கண்ட என் தலைவர் எனது உள்ளம் வெறும் படிறு என நினைந்து வேதனைப்பட்டு வெறுப்பினால் என்னை விட்டு விலகினார். இத் தருணத்தில் என் பொருளையும், குலத்தையும், அழகையும் விரும்பிப் பொய்க்காதல் பேசி என்னை மயக்க வந்தார் அநேகர் வாலிபர்கள். அருள் அரும்பி எனை விரும்பியாளும் எனதிபர் அவரொழிய வேறிலையென்று அயர்ந்திருந்தேன்.

ஒருவர்க்குச் செல்வம் வந்துற்றுழி அவர்கள் அறிவு மிகப் படைத்தவரும் சிறிதேனும் மயங்கித் தடுமாறி நிலை மாறுவார்களென்ற மெய்யை,

"மலடிசிறு தாய்படைத்த மதிப்பரிய செல்வம்
மடமகளென் றெனக்களித்தாள் மயங்கிஅதில்
தலைதடுமாறிச் சிறிது தமியனது நிலையுந் [மகிழ்ந்து
தலைவனெனுந் தன்மையையும் தகைமையையும்
மறந்தேன்"

என்று ஆசிரியர் இனிது விளக்கினார். தலைவரையுமவர் வார்த்தையையும் பேணாது புறக்கணித்துஒழிவார் இன்னலெய்துவது ஒருதலை என்பதை 35-ம் செய்யுளிலிருந்து 47-ம் செய்யுள் வரையிலும் விளக்கிச் செல்லும்முறை உற்று நோக்கற்பாலது. கற்பு எனப்படுவது குழவிப் பருவத்திலிருந்து பேதைப்பருவம்வரையும் கொண்டானில் தெய்வமின்றென இருமுது குரவர்கள் கற்பிப்பதன்படி ஒழுகுலதும், மனையறம்படுத்தகாலத்துக் கடவுளை வழிபடுவதேயாயினும் நாயகன் கற்பித்தாலல்லது தொழாதிருப்பதே யாதலால், அத்தலைவன் சொல்லைக் கடப்பின் குடி முழுதுங்கெடும் என்பதைக், "குறிப்பாயுள்ளுணர்த்தியும் யான் கொள்ளாது விடுத்தேன்—குறும்பு மதியால் எனது குடிமுழுதுங் கெடுத்தேன்" என்று எடுத்துக் காட்டினார். அரிவையர் நிறையழி காதல் நேருந் தன்மை, ஒன்றுங் கருதியன்று அவருள்ளம் சென்று பாய்ந்து சேருதல். "திரியுங் காற்றும் பெட்புங் காரணம் இன்மையில் ஆற்றவும் ஒக்கும்" என்று இவ்வாசிரியரோ மங்கையர் காதலின் இயல்பை விளக்கியுள்ளாராதலால், அதனைக் குறிப்பார், "அருள் அரும்பி யெனை விரும்பியாளும் எனதிபர் அவரொழிய வேறிலை யென்றறிந்தும் அயர்ந்திருந்தேன்" என்றார்.

"என் தலைவர் என்னைவிட்டுப் பிரிந்து ஒருநாள் ஒரு வாரம் ஒருமாதம் ஒருஆண்டு இவ்வாறாகக் கழிந்தது. என் காதலர் என்னைவிட்டுப் பிரிந்ததை நான் முதலில் விளையாட்டாக மதித்து அவர் வருவாரென் றெண்ணியிருந்தேன். இவ்வாறு நாட்கள் கழிந்து ஆண்டுகளாகவும் அஞ்ஞான்றே என்நிலையை உணர்ந்தேன். அவரை ஓயாமல் உன்னி அழிந்தேன். எனது சேடியரை அவர் எங்குள்ளார் என்பதை யறியுமாறு விடுக்க அவர்கள், அவர் சென்ற திசை தேயம் எவர் அறிந்து தெரிப்பர் அது ஒருக்காலும் எவராலும் இயலாது எனச் சொல்லிச் சிரித்தார்கள். பெண்கள் கூட்டமோ என்னை, அவரைப்பற்றி ஆராயவும் விடவில்லை. என் தலைவருடன் கூடியிருந்த காலத்து எனக்கு இன்பத்தை யுண்டு பண்ணின மாலை இப்போது வருத்தத் தொடங்கியது. இரவோ அதனினும் கொடியதாயிற்று. ஒருபுறம் அகல் வேலை அலையை எறிந்து சப்தித்துத் துன்புறுத்தும்; கலை மதியோ என்மீது தண்ணிய சந்திரிகையை உமிழ்வதை விடுத்துத் தீயை உமிழ்ந்தது. தென்றற் காற்றோ உயிருண்ணும் நமனென்ன உலவித்திரிந்தது. இவ்வாறு பல இன்னல்களை யனுபவித்துப் பொறுத்திருந்தும் என்தலைவர் வந்தாரில்லை. என் நாயகனைக் கண்டவரையாகிலும் கேட்டவரையாகிலும் இக்காசினியில் தேடிக் கண்டிடச் சென்றே அலைந்த துன்பம் எவ்வளவு என்று எண்ணுகிறீர்கள். இப்பரந்த உலகில் எங்கேனும் இருப்பர் என்று ஊகத்தால் சொல்லுபவரையல்லாமல் உள்ளபடி கண்டறிந்தோர் ஒருவரையும் கண்டேனில்லை உயிரோடு இருப்பாராகில் எவ்விதமாகிலும் தேடிக் காண்பதே திண்ணம். அவ்வாறு இல்லையெனில் ஒல்லை உயிர் விடுதலே நலம் என்றுன்னி யுளந்தேறி இத் தவவேடத்தோடு என்

சுற்றத்தார் ஆயத்தார் காணுவாறு கரந்து புறப்பட்டேன்.''

உண்மைக் காதலில் பிணிப்புண்ட பெண்கள் காதலன் பொருட்டாய்த் தாய்தந்தையர், சுற்றத்தார் முதலிய யாவரையும் துறப்பார் என்பார்,

''உண்டெனிலோ கண்டிடுவன்; இல்லையெனில் ஒல்லை,
உயிர்விடுதலே நலம் என்றுன்னி யுளந்தேறி
கண்டுயிலும் இல்லிடந் தீகதுவ வெளியோடுங்
கணக்கா இவ்வேடமொடு கரந்து புறப்பட்டேன்''

என்று கூறினர்.

''சித்திரை செய்வீட்டில் நெருப்பும் பெரும்படையும்
முற்றிப் புறப்பட்டார் முற்றத்தே-பித்தரைப்போல்
நில்லென்று சொன்னாலும் நிற்பரோ வப்படிக்காண்
இல்லறத்தை நீத்தா ரியல்பு''

என்னும் ஒழிவிலொடுக்கச் செய்யுளின் கருத்தைக், ''கண்டுயிலும் இல்லிடந் தீகதுவ வெளியோடுங் கணக்கு'' என்று உபயோகிக்குஞ் சதுரப்பாடு மெச்சத் தக்கது.

''தீர்த்தம் மூர்த்தி தலம் இவையெல்லாம் பார்த்து உடலஞ் சலித்தேன். மனமயக்கை யறுக்கும் குருக்கள் மடந்திரிந்து மனம் அலுத்தேன். உண்மை காணுது தருக்க வாதஞ் செய்யும் வாதியர் அவையனைத்தும் வறியவாயிருந்தன. யோகியர்வாழ் குகையெல்லாம் பாழா யிருந்தது.''

உண்மை யறியாது வாயளவாகத் தர்க்க வாதஞ் செய்வதில் பயனின்று என்பார், ''வார்த்தை கத்தும் வாதியர்'' என்று அடைமொழி கொடுத்துக் கூறினர்.

''கலையினமே! பிடிவிட்டகலா மதம் பெருகு மாகுலமே! வன்பிகமே! சுகமே! நான் மறவா நாதனை யெஞ்ஞான்றும் அறிவீரோ? நவில்விர், என அம்மிருகங்களின்பின் உன்மத்தங் கொண்டவளைப் போல் தொடர்ந்து அநேக நாள் கழிக்கலானேன். எல்லாவிடமும் தேடியும் இதுவரையும் என் அதிபரைக் கண்டிலேன். இனி யான் எவ்விடம் நண்ணுவது? எவ்விடம் உண்ணுவது? இக்காயம் இனி யெனக்கு மிக்க அருவருப்பே யாகும். ஐயோ! என் உள்ள நிலை என் தலைவர் அறியாரோ? ஆசை கொண்டு நான் அலைந்தது அத்தனையும் பொய்யோ? அப்படிப் பொய்யாயிடினும் புனிதர் அவர் தந்த போதமலால் வேறெனக்கு ஓதும் அறிவுளதோ? என் தலைவர் நல்லர், அருளுடையர் எனநம்பி யிதுவரையும் நான் உழைப்பது அறிவரெனில் என் எதிர் வந்திலரோ? அவ்வாறு அவர் இல்லையெனில் இவ்வுலகம் அனைத்தும் என்னளவு சுடுகாடேயாகும். என்னுடைய உயிர்த்துணைவர் எண்ணரிய அருளில் ஏதோ சிற்சாயை தங்களிடத் திருத்தல் கண்டு என்மனத் துயரம் முழுதும் தங்கள்பால் வகுத்து ஆறினேன். என்தலைவரில்லாது நான் இவ்வுலகிலிருந்து பெறும் பயனென்? இவ் அழலே கதி'' என்று எரியும் அழலெதிரே நின்று இசைத்தாள்.

''என் அதிபரைக் கண்டிலாமையால் இனியெனக்கு இக்காயம் மிக்க அருவருப்பே'' என்றும், ''ஐயோ என்னுள்ளநிலை அறியாரோ, இனியும் ஆசை கொண்டு நான் அலைந்த தத்தனையும் பொய்யோ? என்றும் நல்லர் அருளுடையர் என நம்பி யிதுவரையும் நான் உழைப்பதறிவரெனில் என் எதிர் வந்திலரோ'' என்றும், ''இல்லையெனில் என்னளவும் இவ்வுலகம் அனைத்தும் எரிநலமுங் கொல்லவென எடுத்த சுடுகாடே'' என்றும் அவளுடைய மனநிலைமையை விளக்கிக்கொண்டே போந்து,

''புனிதர் அவர்தந்த போதமலால் வேறெனக்கு ஓதும் அறிவுளதோ'' என்று கற்பிலக்கணத்தை விளக்கினர். கணவனைவிடச் சிறந்தபொருள் மங்கையர்க்கு இவ்வுலகில் இல்லையாதலால், ''இனியிருந்து பெறும் பயனென்? இவ் அழலே கதி'' என்று எரியும் அழலெதிரே நின்றிசைத்த மொழி கற்பின் திண்மையை விளக்குகின்றதன்றோ! இக்கருத்தினை ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்,

''ஓய்விலாதன வுவமனி லிறந்தன
வொண்மலர்த் தாள்தந்து
நாயிலாகிய குலத்தினுங் கடைப்படு
மென்னை நன்னெறிகாட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்தவென்
றலைவனை நனிகாணேன்
தீயில்வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே''

என்னும் மணிவாசகத்தினின்றும் எடுத்து ஆளுந்திறம் வியக்கற் பாலது.

இவையனைத்தும் கேட்டு முனிவன் தன் நிலைகுலைந்து பழைய உருவத்தை விளக்கி முக மலர்ந்து அப்பெண்ணின் எதிரே நெருங்கி உடலம்பதற, மொழி குழறிச், ''சிவகாமி! யான் உனது சிதம்பரனே!'' என்னக் கூறி முடியுமுன்னம் இருவரும் ஒருருவம்ஆயினர். எவர்தாம் முன் அணைந்தனர் என்று இதுகாறும் தெரிந்திலது. இருவரும் ஒன்றாயினர் என்றே சுருதியறையும். என்னே காதலின் பெற்றி! இந்நிலையன்றோ பேரின்பம்! ''இது போல் யார்க்கு வாய்க்கும்''என மலைமகளும் கலைமகளும், திருமகளும் வாழ்த்தினர். கற்பிற் கரசியாகிய அருந்ததியும், ''அம்ம! இஃது அருங்கதி'' என்று அஞ்சினள். ஆர்வம் உலகார்கவென ஆரணங்கள் ஆர்த்தன. அறத்துறை புகுந்து உயிர்கள் அன்பு வெள்ளம் மூழ்கின! ஆழிபுடைசூழ் உலகம் யாவும் நலம் மேவுவதாக!

இனிக்,காதலின் முழுத்தன்மையையும், அக்காதலால் விழுங்கப்பட்டவர்களின் மனநிலையையும் விளக்கிய திறம் ஆசிரியரவர்களின் அகன்ற அறிவையும், உலக அனுபவத்தையும் நன்கு தெரிக்கின்றது.

இங்குக் கூறியவற்றால், மெய்ம்மைக் காதலையடைந்தார்க்கு இவ்வுலகமே இன்ப வுலகமாகு மென்பதூஉம், உயிர்களுக்கு இயற்கை யறிவாகிய காதல் (அன்பு) செயற்கை யறிவாகிய அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய இவைகளால் சிறிது மாசுணுமாயினும் அதனாலாம் இன்பத்தையடைய இயலாதென்பதூஉம், ஒரு உயிர் எக்காலத்து அன்புவடிவாய்த் திகழ்கின்றதோ அஃது அன்பு பிழம்பாகிய கடவுளை யடைவதற்கு ஏதுவாகிறதென்பதூஉம், அவ்வன்பினை யடைந்தார் விண்ணுலகத்திலும் மற்றெவ்வுலகத்திலும் போய்ப் பெறுவது ஒன்றில்லை யென்பதூஉம், இஃதே அருங்கதி என்பதூஉம், அன்பினையடைந்தார்க்கன்றி இவ்வுலகம் வேறெருவர்க்கு இன்பம் பயவாதென்பதும், இவ்விதக் காதலை அடையப் பெற்றவர்கள் வாழ்வே இன்பவாழ்வு—மனிதவாழ்வு என்பதூஉம் பெறப்படுகின்றன. இயற்கையறிவாய அன்பை யாமும் அடைந்து அவ்வன்பு வடிவினனாகிய இறைவனை மனமொழி மெய்களால் எண்ணி வாழ்த்தி வணங்கிப்பரவுமாறு திருவருளை வழுத்துகின்றேம். சிவம்,

முற்றிற்று.

N. துரைக்கண்ணன்.

தேவாரமும் ஐந்திணையும்.

(635-வது பக்கத் தொடர்ச்சி)

2 திணைகளின் மூவகைப் பொருள்.

இவ்வாறு தமிழ்நாட்டில் ஐந்திணைகளைப் பிரித்திருக்குஞ் சிறப்பை உணர்வதற்கும் அவை யெவ்வாறு தேவாரத்தில் காணப்படுகின்றன வென்பதற்கும், தொல்காப்பியத்தில் குறித்துள்ள சில விஷயங்கள் முன்னுரையாய்ப் பகரல் இன்றியமையாதது. இயற்கைத் தோற்றத்தை ஐந்திணைப் பகுதிகளி லடக்கியவாறு, இவ்வைத் திணைகளிலுமுள்ள ஜீவசிருஷ்டி, ஈச்வர சிருஷ்டிப் பொருள்களை மூவகை வகுப்பில் நம்முன்னோர் விரித்துக்காட்டினர். அவையாவன: முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்னும்மூவகை வகுப்புக்களாம். அவற்றுள் முதற்பொருள் நிலம் பொழுது என இருவகைத்தாம். கருப்பொருள் என்பது அவ்வத்திணையில் வழிபடும் தெய்வம், வாழும் உயர்ந்தோர் (மேல் வகுப்பினர்) தாழ்ந்தோர் (கீழ் வகுப்பினர்),உணவு, ஊர், நீர், விலங்கு, மரம், பூ, புள், செய்தி முதலிய பகுதிகளமைந்தது. (பறை,யாழ் என்னும் பகுதிகள் பின்னொரு வியாசத்தில் காட்டப்படும். இதில் அவை கூறப்படா) உரிப்பொருள் என்பது அகப்பொருள் வாயலில் அவ்வத்திணை எத்துறைகளிற் காணக் கூடுமோ அவ்வகப் பொருள் துறைகளாம். அவற்றை முறையே ஆராய்வோம்:—

முதற்பொருள்

1. நிலம். ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலத்தை எவ்வாறு நாம் இயற்கையில் காண்போமோ, அன்னதி னிலக்கண விவரம் (Topography)

குறிஞ்சி நிலம் மலையும் மலையைச் சார்ந்த இடமும் என்பது.

வானவர்க டானவர்கள் வாதைபட
வந்தொரு மாகடல் விடம்
தானமுது செய்தருள்பு ரிந்தசிவன்
மேவுமலை தன்னை வினவில்
ஏனமின மானினொடு கிள்ளைதினை
கொள்ள வெழிலார் கவணினால்
கானவர்த மாமகளிர் கனகமணி
விலதகா ளத்திமலையே.

சம்பந்தர்.

முல்லைநிலம் காடும் காட்டைச் சார்ந்த இடமும் என்பது

ஞான முணர்வான் காழி ஞான சம்பந்தன்
தேனும் வண்டு மின்னிசை பாடும் திருப்பாசூர்க்
கானம் முறைவார் கழல்சேர் பாடலிவை வல்லார்
ஊன மிலரா யும்பர் வானத் துறைவாரே.

பாலை யென்பது சுரமும் சுரத்தைச் சார்ந்த இடமும் என்பது

அஞ்சுரும் பணிமல ரமுத மாந்தித்தேன்
பஞ்சரம் பயிற்றும்பைஞ் ஞீலி மேவலான்
வெஞ்சுரம் தனிலுமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே

சம்பந்தர்.

[புறங்காடும் இத்திணையின்பாற் படும். மற்ற நான்கு திணையும் அழியுமாயின் உண்டாவது அங்குப் பாலையென்பர். இத்திணைக்குத் தெய்வமில்லை யாதலால், பாலையாகப் பாடிய திருமுருகன் பூண்டியில் ''எத்துக்கிங் கிருந்தீரெம்பெருமானீரே'' என்று வன்றொண்டர் பாடுவாராயினர்.]

நெய்தல் கடலும் கடலைச் சார்ந்த இடமும் என்பது

நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
வெம்மடிக ளும்மூர்தா னேதோ வென்ன
விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய்
விடுங்கலங்கள் நெடுங்கடலுள் நின்று [தோன்றுந்
திரைமோதக் கரையேறிச் சங்கமூருந்
திருவொற்றி யூரென்றார் தீய வாறே

—திருநாவுக்கரசு நாயனார்.

மருதம் பழனமும் பழனத்தைச் சார்ந்த இடமும் என்பது

விழுநீர் மழுவாட் படையண் ணல்விளங்கும்
கழுநீர் குவளையும் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங்கணின் முட்டம்
தொழுநீர் மையர் தீதுறு துன்பமிலரே

சம்பந்தர்.

2. பொழுது:—ஆரியர்களும் பொழுதை இருவகையாக்கிப் பெரும்பொழுதாகிய வசந்தம், கோடை, வறளி, மாரி என்னும் ஒருவருடத்திய நாற்பகுதியையும், எண்சாமமாகிய ஒருநாளின் பகல் நான்கு இரவு நான்கு சிறுபொழுதாகவும் கணக்கிட்டனர். அவர்களுக்கு மூன்று மாதம் ஒரு பெரும்பொழுதாயும், மூன்றுமணிநேரம் (சூரியோதயத்திலிருந்து)ஒரு சிறுபொழுதாயு மிருந்தன. நம்முன்னோருக்குப் பொழுதின் வகுப்பு அவ்வாறல்ல. ஒரு வருடத்தை ஆறு கூறாக்கி, இவ்விரண்டு மாதங்கள் பெரும்பொழுதாயும், ஒருநாளை ஆறுபாக மாக்கி நான்கு மணி நேரத்தை ஒரு சிறுபொழுதாகவும் நம்முன்னோர் வகுத்தனர்.

அவற்றுள் பெரும்பொழுது இளவேனில், முதுவேனில், கார்,கூதிர், முன்பனி, பின்பனி என்பனவாம். அவற்றின் இன்பம் தேவார வாயிலாகக் காண்க.

i. இளவேனிற்காலம்

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

—அப்பர்.

18906

ii. முதுவேனிற்காலம்

வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
வொளிகொண் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிரு புன்கூ ருளானே.

—சுந்தரர்.

iii. கார்காலம்

கோலமா மயிலாலக் கொண்டல்கள்
சேர்பொழிற் குலவும் வயலிடைச்
சேலினங் கயலார் புனல்
சூழ்ந்ததிருக் கனருள்

நீலமேவிய கண்டனே !
நிமிர்புன்சடைப் பெருமானெனப் பொலி
ஆல நீழலுளாயடைந்
தார்க் கருளாயே.

—சம்பந்தர்.

iv. கூதிர்க்காலம்

மின்னானை மின்னிடைசேர் உருமினானை
வெண்முகிலா யெழுந்து மழை பொழிவான் [றன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தையாகி
என்னானை யெந்தை பெருமான் றன்னை
இருநிலமு மண்டமுமாய்ச் செக்கர் வானே
அன்னானை யாவடுதண் டுறையுண் மேய
அரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே

—வாகீசர்.

v. முன்பனிக்காலம்.

குளங்கள் பலவும் குழியும் நிறையக்
குடமா மணிசந் தனமும் மகிலும்
துளங்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திளைத்தெற்று சிற்று றதன்கீழ் கரைமேல்
வளங்கொண் மதின்மாளி கைகோ புரமும்
மணிமண் டபமும் மிவை மஞ்சு தன்னுள்
விளங்கும் மதிதோய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியே னையும்வேண் டுதியே

வரைமா னனையார் மயிற்சாய னல்லார்
வடிவேற் கணல்லார் பலர்வந் திறைஞ்சத்
திரையார் புனலுட் பெய்து கொண்டுமண்டித்
திளைத்தெற்று சிற்று றதன்கீழ் கரைமேல்
நிரையார் கமுகும் நெடுந்தாட் டெங்கும்
குறுந்தாட் பலவும் விரவிக் குளிரும்
விரையார் பொழில்சூழ் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியே னையும் வேண்டுதியே

—சுந்தரர்.

vi. பின்பனிக்காலம்

உரிந்தவுடை யார்துவரா லுடம்பை மூடி
யுழிதருமவ் வூமரவ ருணரா வண்ணம்
பரிந்தவன் காண் பனிவரையிப் பண்ட மெல்லாம்
பரித்துடனே நிரந்துவரும் பாய்நீர்ப் பெண்ணை
நிரைந்துவரும் இருகரையுந் தடவா வோடி
நின்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே

—திருநாவுக்கரசு.

[அழிவைக் காட்டுவதால் பாலைத்திணையில் பின்பனியைக் காட்டும் மேற்கோள்:—"பின்பனித்தானு முரித்தென மொழிப" என்றும் "இருவகைப்பிரிவுநிலைபெறத் தோன்றினும், உரியதாகு மென்மனார் புலவர்.

—தொல்காப்பியம்.]

சிறுபொழுது, நமது நாட்டில் ஆறாகும். அவையாவன, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பனவாம். சூரியோதய முதல் சூரியாஸ்தமனம் வரையில் உள்ளபொழுதை மூன்று சமபாகமாக்கி முதற் பாகத்தைக் காலையென்றும், கடைப்பாகத்தை மாலையென்றும் இடையில் நின்றதை நண்பகலென்றும்மொழிவர். அவ்வாறே சூரியாஸ்தமனம் முதல் மறுநாள் உதயம் வரையிலுள்ள பொழுதை முக்கூறு செய்து மாலையென்றும் யாமமென்றும், வைகறை யென்றும் மொழிவர். ஒவ்வொரு சிறுபொழுதும் சற்றேறக்குறைய நாலுமணி நேரமென்றாலும், வெய்யற்காலத்தில் பகற்பொழுது அதிகமென்றும், மழைக்காலத்தில் இராப்பொழுது அதிமென்றும், உலகத்தில் வழங்குவதை அறிக. கெடியாரமில்லாத அக்காலத்தில் பொழுதை வேறுவித கருவிகளாலறிவதால், சூரியோதயம் சூரியாஸ்தமனம் இவ்விரண்டுமே அளவைகளா யெடுக்கப்பட்டன. தேவாரத்தின்கண் இப் பொழுதுகள் எவ்வாறு சித்திரிக்கப்பட்டன என்பதைக் காண்போம்.

i. காலை.

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் [தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பா யென்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே யென்றும்
அடியனைய விடைமடவாள் பங்கா வென்றும்
சுடலைதனில் நடமாடும் சோதீ யென்றும்
கடிமலர்தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

— அப்பர்.

ii. நண்பகல்.

மாசிலொள் வாள்போன் மறியு மணிநீர்த் திரைத் [தொகுதி
ஊசலை யாடியங் கொண்சிறை யன்ன முறங்கலுற்றால்
பாசறை நீலம் பருகிய வண்டுபண் பாடல்கண்டு
வீசும் கெடில வடகரைத் தேயெந்தை வீரட்டமே.

— அப்பர்.

iii. எற்பாடு.

பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டுங் கைதைசூழ் கழிக்கானல்
போயிரவிற் பேயோடும் புறங்காட்டிற் புரிந்தழகர்
தீயெரிகை மகிழ்ந்தாடும் திருவேட்டக் குடியாரே.

—சம்பந்தர்.

iv. மாலை

[காரு மாலையு முல்லை ; குறிஞ்சி
கூதிர் யாம மென்மனார் புலவர்

—தொல்காப்பியம்.

"பனியெதிர் பருவமு முரித்தென மொழிப"-ஷை.]

சுருளுறு வரையின் மேலார் துளங்கிளம் பளிங்கு சிந்த
இருளுறு கதிர்நு ழைந்த விளங்கதிர்ப் பசலைத் திங்கள்
அருளுறு மடிய ரெல்லாம் அங்கையின் மலர்க ளேந்த
மருளுறு கீதம் கேட்டார் வலம்புரத் தடிக ளாரே.

— அப்பர்.

v. யாமம்.

பாடுவார் பசிதீர்ப்பாய் ! பரவுவார் பிணிகளைவாய் !
ஓடுநன் கலனுக வுண்பலிக் குழல்வானே
காடுநின் னிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே ! குருகாவூர் வெள்ளடை நீயன்றே ?

—சுந்தரர்.

vi. வைகறை

[வைகுறு விடியன் மருத மெற்பாடு
நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்

—தொல்காப்பியம்]

(i) மாதர்ப் பிறைக்கண்ணி யானை,
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்,
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். — அப்பர்.

(ii) "மேய்ந்திளஞ் செந்நெனன் மென்கதிர்
கவ்வி மேற்படுதலின் மேதி வைகறை
பாய்ந்த தண்பழனப் புறவார்
பனங்காட்டூர்" —சம்பந்தர்.

மேற்கூறிய நில விவரங்களும் பெரும்பொழுதும், சிறுபொழுதும் ஏனைய பொருள்களுக்கு மூலாதாரமாயிருக்கின்றன வாகையால், இவற்றைத் தமிழ்ப் புலவர் முதற்பொருள் என்றனர் போலும். இம் முதற் பொருள்களை அடிப்படையாக வமைத்து, ஆங்காங்கு ஏற்படும் குடிகளும், தலைவர்களும், அவர் வழிபடும் தெய்வமும், அத்தகைய மக்களுக்கு உணவு, அவர் வசிக்கும் ஊர், அவர் பருகும் நீர், அந்நிலத்திலுள்ள விலங்குகள், பறவைகள், மரங்கள், அணியும் பூக்கள், அந்நில மாந்தர் தொழில் வர்த்தமானங்களும் அந்நிலக் கருப்பொருள்களென்றெடுக்கப்பட்டன. இவையே அந்நிலத்திலுள்ள சத்துப்பொருள்களா யியங்குமாகையால் கருப்பொருள் எனப்பட்டன. நிலத்திற்குத் தக்கவாறு மனிதர்பேதம் ஏற்படுவதுபோல், ஏனைய கருப்பொருள்களும் பேதமாம். உதாரணமாக மருதநிலத்தில் வசிக்கும் உழவர், மலைச்சாரலில் ஜீவித்திருத்தல் மிகவும்கடினம். சீதோஷ்ணமாத்திர மன்று, அந்நில விலங்குகளைக் கண்டஞ்சுவர். ஆயினும் குறிஞ்சி நிலக் குறமாதர்கள் வெறியாட்டுப் பாடல்களைக் கேட்டுப் புலியும் அஞ்சும். அவ்வாறே குறவர் பழனத்தில் உழவு செய்ய யோக்கியதை யற்றவர்களே. நாகரிகம் மிக்க இந்நாளிலும் குறவனொருவனேனும் பயிர்வேலையி லமர்ந்து மேழிச் செல்வத்தை வளர்த்தன னென்பதை நாம் இதுகாறும் கேட்டிலோம். ஆகையால் ஆன்றோர் ஒவ்வொரு திணைக்கும் உரித்தாய கருப்பொருள்கள் அத்திணையிலேயே காணக்கூடு மென்றும், வேறு திணையில் காணப்பெறின் திணைமயக்கத்திற்கு இடங்கொடுக்கு மென்றுங் கூறுவார். நம் முன்னோர் குடியேறியபின்னர் நாள்கள் செல்லச்செல்லத் திணைகளுக்கு வரம்பு காணக் கடினமாயிற்று. நெய்தலிலுள்ள பறவை மரம் முதலியன மருதத்திலும், குறிஞ்சியிலுள்ளன மருதத்திலும், முல்லையி லுள்ளன குறிஞ்சியிலும், காணப்படலாயின. இவற்றின் காரணம் பல. இத்திணைமயக்கங்கள் இயற்கையில் எங்கும் காணப்படுவன. தேவாரத்தில் அவ்வத்தலங்களில் மூவர் கண்டவை கண்டவாறு பாடினர். திணைமயக்கமின்றி யிருக்கும் தன்மைகளை ஆங்காங்குத் தேவாரத்தில் காணக்கூடியன முன்னரும், திணை மயங்கிக் காணக்கூடியன பின்னரும் ஆராய்வோம்.

இவ்வித ஆராய்ச்சியுள் புகுவதன் முன்னர், நாம் முக்கியமாய் மனதில் கவனிக்கவேண்டியது ஒன்று. தேவாரம் பாடிய மூவரும் நகரவாசிகள். பிரபுக்கள் எனத்தக்க லௌகிக அந்தஸ்து பெற்றவர்கள். சாதாரணமாய் மருத நிலவாசிகள் எவ்வாறு மற்றைய நிலப்பொருள்களைக் கண்டு களிப்பாரோ அல்லது வெறுப்பாரோ, அக்குணமே நாம் மூவரிடத்திலும் எதிர்பார்ப்பது நியாயமாயினும், இப்பெரியோர்கள் பாடலில் ஒவ்வொரு திணையிலும் அவ்வக்கருப்பொருள்களைப் பாடுமிடத்து அந்நிலவாசிகளா யிருப்பின் எப்படி உவகையுடன் பாடக்கூடுமோ அதற்கும் சிறப்பாய்ப் பாடுவதைக் காணலாம்.

மற்றும் ஒன்று இவ்வாராய்ச்சியில் கவனிக்க வேண்டியது. நம்முன்னோர் சைவசமய மென்னும் பிற்காலப் பட்டம் வகித்த திருநெறியாகிய (சன்மார்க்கம்) சமயத்தினர். இவர் வழிபடும் கடவுள் சிவபெருமான். இக்கடவுளிடத் தன்புவாய்ந்த இப்பெருமக்கள் குறிஞ்சி நிலத்தில் நாகரிகம் சற்று மில்லாக் குறவர் வழிபடும் முருகக்கடவுள் தாங்கள் வழிப்படும் கடவுளுக்குப் பெரும்பாலும் பேதமான கடவுளன் றென்றும், ஒவ்வொரு குன்றுதோறுடவில் திகழும் மூர்த்தி சிவபெருமான் சக்தியென்றும் கண்டனர். தேவாரத்தில் சிவபெருமான் "முருகவேள் தாதை" எனப் பலவிடங்களிற் புகழப்பட்டதைக் காணலாம்.

நமது முன்னோர் கபாடபுரத்தை விடுவதற்கு முன்னர் முருகக் கடவுளையும் வழிபட்டனரா என்பதற்கு நமக்குத்தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை. குறமகளாகிய வள்ளியை மணம் புணர்ந்த கோலம் கீழ்த்தொடர்ச்சி மலைகளில் வடபாக க்ஷேத்திரங்களிற் பெரும்பாலும் காணப்படுவதாலும், தேவியின்றிப் பிரமசரிய கோலமாய்ச் சில புராதீனத் தென்னாட்டுத் தலங்களில் வழிபடுவதாலும், இக்கடவுள் வழிபாடு நம் முன்னோருக்குத் தென்னிந்தியாவுக்கு வருமுன்பு உண்டென்றும், அம்மூர்த்தியை அங்குச் சென்றவர்களிற் சிலம்பர் சிலர் தென்னிந்தியாவின் மலைகளுக்குக் கொண்டு வந்து பூஜிக்கலாயினரென்றும் அநுமானிக்கலாம். எப்படியாயினும் முருகக் கடவுள் இருப்பிடம் மலையெனத் தமிழ் நூல்களும் ஆரிய புராணங்களும் கூறுவதால், அவர்

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

— தொல்காப்பியம்.

எனக் குறிஞ்சிநிலக் கடவுளாய்க் கொள்ளப்பட்டதும் நமதிலக்கணங்களுக்குப் பொருத்தமே.

முல்லைநிலம் ஆரிய தேசங்களிலும் அடர்ந் திருப்பதுவே. ஆரியதேசங்களிலும், ஆயர்களுக்கு யாதவர் என்னும் பேர் உண்டு. ஆயர்கள் பெருமான் கண்ணனாதலால், அக்கடவுளே முல்லைநிலக் கடவுளாய்த் திணையிலக்கணத்தி லெடுக்கப்பட்டது. வருணன் ஜல தெய்வமாதலால், ஜலத்தில் தமது தொழிலை நடாத்தும் பட்டினவர், தமது பூமியில் அக்கடவுளை வழிபட்டார். மருதநிலம் ஓங்குவதற்கு "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" யென்பதால், அம்மழைக்கு, அதாவது மேகங்களுக்கு அதிபதியான இந்திரனை மருதநிலத்தார் வணங்குவர். இந்திரனுக்கு முற்காலத்தில் விழாக் கொண்டாடிய சிறப்பைச் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களா லறியலாம்.

பாலையென்பது பாழ்நிலம். இதில் நன்மையுடையது காண்டலரிது.

"திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடி பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்பொடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்பொடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே !"

என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிய பாடலில் "காடு" என்பது பாலைவனம். குறிஞ்சி அல்லது முல்லையிற் காணப்படும் காடெனில், அவை தெய்வமுனவாய் ஒருவித கட்டுதிட்டத்திற்கு அடங்கியவாகையால், அடவிகாடென்னும் பட்டம் பொருந்தாது. மேற்கண்ட பாசுரத்தில் குறித்த வூர்கள் முறை தவறினமையால், அவை யெத்திணையி லிருப்பினும், பாலைத்திணையெனக் கொள்கவென்றனர் அப்பர்.

E. N. தணிகாசல முதலியார்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

7. தாடகை வதைப்படலம்.

[637-ம் பக்கத் தொடர்ச்சி]

முத்தரோ டுலாவரு பற்றிலாப் பரத்தையர்.

ஆரணத்துறையுளாய அங்கநாட்டுள காமனுச்ரமத்தின் தூய்மையைக் கோசிகன்,

பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்வுமேன் முடுகினு றறிவுசென்
றுற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் றூய்மையே.

[வைத்துள பொருள்களிடத்தில் பற்றும், இல்லாத பொருள்கள் வேண்டும் எனும் அவாவும் ஆகிய இரண்டும் வேரோடு ஈரமற்று அழிய, அதனால் பிறவி முடிந்துவிடும்படி மெய்ஞ்ஞானத்தின்பால் விரைகின்றவர்களுடைய அறிவினிற்சென்று அதனைத் தனக்கு இடமாகக் கொண்டுடைய பரமசிவனே இங்கேயிருந்து யோகம் செய்தான் என்றால், இதனுடைய தூய்மையின் அளவைச் சொல்லத்தான் கூடுமோ]

என்று இராமனுக்குக் கூறி வியக்கின்ற செய்யுள் நமக்குப் பின்னும் கந்தபுராணத்தின் நினைவை உண்டாக்குகின்றது. அந்நூலிலே, கைலைமலையுற்ற மன்மதனைச் சிவபிரானிடத்தில் வழிகாட்டியனுப்பும் நந்திதேவன்,

இகலுமன்பு மிறையுமின்றி யெவ்வுயிர்க்கு முள்ளதோர்
புகுதிகாடி முறையினைப் புரிந்துசேர் பவர்க்குமேல்
தகுதிசெய்து கருணைகூர் சயம்புமுன்பு சார்தியேல்
மிகுதிகொண்ட மேலைவாய்தன் மேவியேகு கென்றனன்.

[வெறுப்பும் விருப்பும் சிறிது மில்லாமல் தனக்குரிய கடமையைச் செய்து எல்லாச் சீவன்களுக்கும் உள்ளதாகிய அந்தக் கரும வாயிலாக அடைகின்றவர்க்கு, அதன்மேல் அறிவை (ஞானத்தை) அளித்துக் கருணை புரிகின்ற சிவனுக்கு முன்பு நீ போகவேண்டுமானால், பொலிவுடன் விளங்குகின்ற மேற்கு வாயில்வழியாகச் செல், என்றனன்.]

கம்பர் பாசுரத்திலும் சிவாசாரியாரின் பாசுரத்திலும் சிவனைப்பற்றிக் கூறுகின்ற சொற்கள் சற்றேறக்குறைய ஒரேவிதமாகத் தொனிக்கின்றன. எனினும் பற்றையும் அவாவையும் விலக்கி மெய்ஞ்ஞானத்தைத் தாமாக எய்தியவர்கள் ஈசுவரனை அறிகின்றனர் என்பர் விச்வாமித்திரர். நிஷ்காம்ய கருமங்களை ஆற்றிவருபவர்க்கு ஈச்வரன் தன் கருணையால் ஞானத்தை அளிக்கின்றான் என்பர் நந்திதேவர். மெய்ஞ்ஞானம் ஒருவனுக்குத் தன்னின் முயற்சியாலேயே உதிக்கக்கூடியதென்று கோசிகன் கூறியது உண்மையோ, அல்லது கருமமார்க்கம் கடைபிடித்துப் பக்குவ மடைந்தார்க்கும் மற்றவர்க்கும் ஞானத்தைப் பரமன் அருளினாலன்றி வாய்க்காதென்று அப்பரமனுக்கு எந்நாளும் அருகிருக்கும் நந்திதேவர் நவின்றதுண்மையோ, என்னும் வாதத்தில் தலையிட இடம் இதுவல்ல. விச்வாமித்திரனையும் நந்திதேவரையும் இவ்வாறு சொல்வித்த இருபெரும் புலவர்களின் தத்துவக்கொள்கைகள் மாறுபடும் விதத்தைக்காட்டுதற்கும் கூறவில்லை. அன்புநெறியும் அந்தத்தில் துறவுநிலை தந்துவைக்குந் தத்துவத்தைக் கம்பர் காமதகனத்தால் காட்ட முயன்றபோது, கந்தபுராணம் அவர் மனதில் இருந்திருக்க வேண்டுமென்று நாம் கொண்ட அநுமானத்திற்குப் பின்னுமோர் ஆதாரமாய் இவ்விரு செய்யுள்களுக்கும் உள்ள ஒற்றுமைப் பாகத்தை மாத்திரம் உணர்த்திவைக்க உன்னினோம்.

பிறநூல்களோடு மாறுகூறி வாதிக்க நினைத்திலோமாயினும், 'சிவனே' ஞானிகளின் அறிவிற்கு எட்டியவன்' என்று இங்ஙனக்கூறிய விச்வாமித்திரன், பின்னொரிடத்தில் திருமால் தவஞ் செய்தவொரு சோலையை இராமனுக்கே காட்டி இது,

எங்கள்நான் மறைக்குந் தேவர்
அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச்
செங்கண்மால் இருந்து மேல்நாள்
செய்தவம் செய்த தன்றே

என இயம்புவானாயின், அம்முனிவன் சிவன்வேறு மால் வேறு என்று கருதினானென்றும், கருதி அறிவிற்கு எட்டக்கூடியவன் சிவனாக, எட்டாத் தனிப் பரம்பொருள் செங்கண்மால்தானே என உயர்த்தினானென்றும் ஐயமுற வேண்டி வருகின்றது. "உணர்வுமேல் முடுகினார் அறிவுசென்று உற்ற வானவன்," என்றதில் "பொய்யிலா மெய்யறிவிற் போத பரிபூரண அகண்டிதா காரமாய்ப் போக்கு வரவற்ற பொருள்" எனத் தாயுமானவர் பாடியபடி, 'அறிவு சென்று' என்பதை ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளினும், அல்லது 'அறிவு உற்ற வானவன்' (அறிவு போய் எந்தத் தேவனை அடைகின்றதோ அந்தத் தேவன்) என அறிவு என்பதை எழுவாயாகக் கொண்டாலும், இருவகையிலும் சிவன் அறிவிற்கு எட்டியவனாகின்றான். இதற்கு மாறாகச் செங்கண்மால் மறைக்கு எட்டான், தேவர்களின் அறிவிற்கே எட்டான், ஒழிந்து நின்ற யாவர்க்கும் எட்டான், எனக் கோசிகன் இவ்விரு கடவுளர்களைப் பிரித்துப் பேசியதேனென்று ஆராய்ந்தாலும் ஒருமுடிவிற்கு வருவது எளியதல்ல. இது எவ்வாறாயினும் ஒன்று நிச்சயம். இராமனின் பரத்துவத்தை வெளிப்படையாய் விளம்பி அவனை இங்கு "ஆரணத்துறையுளாய்" என்று கோசிகன் முன்னிலைப்படுத்தியுளானாயின், பின் அவ்விராமனையே படர்க்கையில் வைத்து "எங்கள் நான்மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண்மால்" என்று அவனைப் பற்றி அவனுக்கே கூறுவது ஒருவாற்றானும் பொருந்தாது.

அன்றுபோது கோசிகன் மைந்தரோடு அச்சோலையின்கண் தங்கியதால் நாமும் இங்கு இந்நேரம் அவன் வகுத்த தத்துவத்தில் தங்கியிருந்தோம். அவ்வனத்திருந்த தவசிகளுக்கிடையே இரவைக்கழித்து மறுநாட் காலையில் அவர்கள் அகன்றுபோய் ஓர் பாலைவனத்தைக் குறுகினார். ஐந்திணையி லொன்றேனும் தன்னிலையழிந்து பாழ்பட்ட பாலையைக் கோசலத்தில் கூறப்படாதென்று கம்பர் நாட்டுப்படலத்தில் இத்திணையை வருணித்திலர். தாடகையை அரங்கிற்குக் கொண்டுவருந் தருணத்தில் அவள் வசித்த கொடுஞ்சுரத்தைக் கூறும்வாயிலாக அக்குறை தீர்கின்றது. பாலையைப் பாடியுள்ளார் பல புலவர். பாலைக்குரிய மரம் விலங்கு பொழுது முதலிய கருப்பொருள்களை வெகு அழகாய்க் கையாண்டு மிருக்கின்றனர். கம்பரைப்போல் கவிசக்ரவர்த்தி என்ற புகழ் பெற்ற சயங்கொண்டார் தம் கலிங்கத்துப்பரணியில்

பாலைக்காட்டைப் பாடியதிறம், அங்குச் சிறப்பாகச் சொல்லப்பட்டுள சிற்சில வருணனைகளை நோக்குங்கால், கம்பருக்குமில்லையென எண்ணத் தக்கதாயிருக்கின்றது. பாலையில் நீரும் நிழலும் எங்குமில்லாமற் போயின என்பதைச் செப்புகின்ற சயங்கொண்டார்,

ஆதவம்பருகு மென்று நின்றநிழ
லங்கு நின்றுகுடி போனவப்
பாத வம்புனல் பெறாது ணங்குவன
பருகு நம்மையென வெருவியே.

[சூரியன் கண்டால் தம்மைக் குடித்துவிடுவான் என்று மரத்தடியில் ஒளிந்து கொண்ட நிழல்கள், நீரில்லாது வாடுகின்ற அம்மரங்கள் தம்மை நீரென்று எண்ணிக் குடித்துவிடப் போகின்றனவே என அஞ்சி அம்மரத்தடி விட்டும் விரைந்தோடிப் போய்விட்டன]

எனப் புனைந்துரைத்த காரணம் வியக்கத்தக்கதே. இப்படி நிழலற்ற பாலையில்,

கலையின் பிணைகள் நிடுமென் றுகசிந்
திலையின் னிழலவ் வயினின் மையினால்
நிலையின் னிழலா னதுநின் றுகொடுத்
துலையும் வெயினின் றுருகும்......

[பெண்மான் வெயிலின் கொடுமையால் வெம்பிப் போகும் என்று கலைமான் மனமிரங்கி, அங்கெங்கும் இலையின் நிழல் என்பது இல்லாமையால், அந்தக் கலைமான் தான் நின்று, அதனாற் பிறக்கும் நிழலைப் பெண்மானிற்குக் கொடுத்துத் தான் உருகிப்போம்]

எனச் சீவகசிந்தாமணியில் காண்கின்ற செய்யுளுக்கு நிகரான அழகுடைய செய்யுள் கம்பரின் பாலை வருணனையில் இல்லை. ஒரு வேளை, அன்பால் உருகுகின்ற இத்தகைய செய்தி தாடகை வனத்தில் வைக்கப்படாதென்று கம்பர் விட்டுமிருக்கலாம். 'வெவ்வழல் வாய் சொலின் வேம்' எனும் சிந்தாமணிச் சொற்கள் கம்பரின் நினைவிருந்ததால்இவரும், 'பகரினும் பகருநாவேம்'என்று சொல்லலாயினர் என்னலும் அமையுமாதலால் இவ்வரக்கி உறைகின்ற வனத்தினின்று அன்பென்பதைக் கம்பர் அறிந்தே விலக்கினர் என்று கொள்வதே சிறப்புடைத்து. எனினும் கலிங்கத்துப் பரணியினின்று முன்னெடுத்துக் காட்டிய அச்செய்யுளும் கீழ்வரும் இச்செய்யுளும், கம்பர்மேல் வாகைகொண்டு நிற்கின்றன.

தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூர்வாய் வெந்து லர்ந்துசெந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினா னக்கி விக்குமே.

[நெருப்பிலே இருந்தாலும் நீரைக் கண்டால் போதுமெனத் தவிக்கும் மான்கள், செந்நாயின் வாயில் வழிகின்ற எச்சிலை நீரென்று அஞ்சாமல் நக்கி நக்கி விக்கிக் கிடக்கும்.]

என, மான்கள் தம்மைக் கொல்லவல்ல செந்நாயின் வாயைச் சென்று நக்குவதும், அந்நாய்களோ கொல்லவுமியலாமல் சோர்ந்து கிடப்பதும் காட்டி, நீரின் வேட்கையும் வெம்மையும் மிகுந்திருந்ததைச் சயங்கொண்டார் சொல்லிய வண்ணம் கம்பர் பாசுரங்களில் ஒரு நிகழ்ச்சி காணலரிது. கம்பர்,

புழுங்குவெம் பசியொடு புராணும் போரா
விழுங்கவந் தெதிரெதிர் விரித்த வாயின்வாய்
முழங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை
வழங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே.

[மேலிருந்து சொரிகின்ற கொடிய அனலுக்குப் பொறுக்காமல் யானைகள் கத்திக்கொண்டு மறைவு இடம் தேடி, பசியினால் புழுங்கிய பெரும் பாம்புகள் விழுங்குவதற்காக எதிரெதிர் விரித்துக் கொண்டிருக்கும் வாயினிடத்தில் புகும்.]

என்றதும், வாயைத் திறக்கும் வலியேனும் பாம்பிற்கிருந்ததாலும், யானையும் அறியாமற்சென் றவ்வாயினுள் புகுந்ததாலும், செந்நாயின் வாயை நக்கிய மானினது செய்திக்குப் பின்பட்டது.

இன்னபடி கம்பர் பாலைக்குரிய சில நிகழ்ச்சிகளைச் செப்புந்திறத்தில் சயங்கொண்டார்க்கும் சிந்தாமணிக்கும் சிறிது எஞ்சினா ரானபோதிலும், அந்நிலத்தின் வெப்பத்தினளவையும் ஆறாக் கொதிப்பையும் பசையற்ற நிலையையும் கூறுகின்ற விசாலத்தில் எடுப்பும் இணையுமற விஞ்சி நிற்கின்றனர்.

பரிதிவா னவனிலம் பசையறப் பருகுவான்
விருதுமேற் கொண்டுலாம் வேனிலே யல்லதோர்
இருதுவே றின்மையா லெரிசுடர்க் கடவுளுங்
கருதின்வே முள்ளமுங் காணின்வே நயனமும்.

[இந்நிலத்தைப் பசையறப் பருகுவேன் என்று சூரியன் தூக்கிய போர்க்கொடியைத் தாங்கி உலவுகின்ற வேனிற்காலம் அல்லாது வேறு பருவம் இல்லாததால், அக்கினிபகவானே, இப்பாலையை நினைப்பானாயின் அவன் மனம் வெந்துபோம். காண்பானாயின் அவன் கண் கரிந்துபோம்.]

அறம் அறம் செய்தல், தீவினையே தீவினைசெய்தல், தவம் தவம்செய்தல், விதிக்கு விதியாதல், எனக் கம்பர் ஒருதொழில் தன்னையே தான் செய்துகொள்ளும்படி சூழ்கின்ற தந்திரத்தை முன்னோரிடத்திற் கண்டுள்ளோம். இங்குத் தீக்கடவுள் தீய்ந்துபோகுங் கற்பனையைக் காண்கின்றோம். வெம்மையே வெம்மையால் சூடுண்டதென்று, பண்பு ஒன்று அப்பண்பையே சாரும்படி செய்கின்றார். இதற்கு நிகராக, தேவருக்கு மணம் வினவத் தமயந்தியின்பால் தூதுவந்த நளன், காமத்திற் காற்றாது அத்தேவர்படுகின்ற பாட்டை உரைக்க முயன்றனனாகிச் "சுடுதழல் கடவுள் மீதும் சுட்டது காமத் தீயே," என நைடதத்தில் கூறுவது ஒன்றையே செப்பலாம். 'எரிசுடர்க் கடவுள்' என்றதற்கு 'அக்கினிதேவன்' எனப்பொருள் கொண்டால் இன்னவாறு அதிவீரராம பாண்டியன் கம்பருக்கு இணையாக வந்து சேர்கின்றான். இனி, இதனில் இவருக்கு இணைகொடுக்க இணங்காதார் உளராயின் 'எரிசுடர்க் கடவுள்' என்பதைச் சூரியன் என்றே ஏற்காலமே. ஆயின், இந்நிலத்திற்குச் சூரியன், தான் செய்த கொடுமையைத் தானே நினைப்பானாயின் மனம் வெந்தும்,காண்பானாயின் கண்கரிந்தும் போவான் என்னல் கம்பரின் கருத்தைப் பெரிதும் சிறக்கச் செய்யும். அதுவுமன்றிப் பாலைநிலம் பெற்றுள வெம்மை யாவும் பரிதியால் அளித்ததேயாம். வரந்தந்த சிவனது சிரத்திலேயே கைவைக்கச் சென்ற பஸ்மாசுரனைப் போல் இப்பாலையும்,கதிரோன் கொடுத்த வெப்பத்தைக் கொண்டு அவனையே வேக வைக்கின்ற வன்மையைப் பெற்றதாயிற்று, என்னும் துணிபும் இதன்பாற் காண இயலும்.

சூரியனையே சுட்டழிக்கவல்ல இப்பாலைநில வெம்மை ஒருநாளும் ஒருபோதும் ஆறாத்தன்மையது. இவ்விதம் உற்றதோர் கொதிப்பு ஆறுதலின்றி என்றும் தங்குவதற்குக் கம்பர் கூறுகின்ற உவமை வீரருக்கே தெரியவல்லது. ஏனெனில்,

விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்சவே செருமுகத் தன்றியே திறனிலா
வஞ்சர்தீ வினைகளான் மானமா மணியிழந்
தஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றுதரோ.

[ஆகாயத்திலிருந்து பொழிகின்ற மழைக்கும் மேலாக அதிகரித்த அம்பும் வேலும் பட்டுச் செம்மையாகப் போர்முகத்தில் அல்லாமல், திறமை இல்லாத வஞ்சகர்களின் மோசத்திற்காளாகித் தம் வலியமைந்த சேனையை இழந்து தோல்வியுற்ற வீரர்களின் நெஞ்சைப்போல் அப்பாலைவனம் ஒருபோதும் ஆறாத கொதிப்புடையதாயிருந்தது]

என்றால், சமப்போர் புரிந்தேற்றுத் தோற்றலும் தளராத சுத்தவீரர், புல்லிய பகைவனின் கைதவத்திற்கே உடைவாராயின் பெரிதும் அழுங்குவாரென்பது நம்மனோர் இவ்வுவமையால் அறிந்தனுபவிக்கலாமேயல்லாமல், இவ்வுவமையைத் தெரிந்து பாலையின் கொதிப்பை ஊகிக்க இயலாது. இச்செய்யுளின் முன்னிரண்டடிகள் போர்முகச் செய்தியே கூறுவதால், 'மானமாமணி இழந்து' என்பதற்கு [மானம் - வலிமை, ஆம் - பொருந்திய, அணி - படையை, இழந்து - இழந்து] 'வலியுடைத் தன்படையை இழந்து' என்று பொருள் கொள்ளவேண்டியதாயிற்று. அல்லாக்கால், வஞ்சகர்களின் தீச் செயலை நல்லதென நம்பித்தம்மானமாகிய இரத்தினத்தை இழந்து பின் முகங்காட்ட அஞ்சுபவர் நெஞ்சின் ஆறாக்கொதிப்பு எவர்க்கும் பொருந்தும். அதனினும், வஞ்சகர் கைப்பட்டுக் கற்பிழந்த கன்னிகையர் நெஞ்சின்நிலை பாலைக்கு உரியதோர் உயர்ந்த உவமையாம். திறனிலா வஞ்சகர் செய்த மோசத்தால் தோற்றவர் போரும் படையும் இழந்தார்களேயன்றித் தம்மானமும் பெருமையும் இழந்தவராகார், என எண்ணுகின்றே மாதலால் மானமாம் மணி இழந்தார் என்னும் பொருள் கொண்டிலம். கபடன் ஒருவன் இழைத்த கைதவத்தைக் கைதவமென்று அறியாது தன்படைஞரைப் பறிகொடுத்தவோர் போர்த்தலைவன், "அத்தீயனின் சூழ்ச்சியை ஊகிக்கும் புத்தி நுட்பம் எனக்கில்லாததாலல்லவோ, வீரத்தையே நம்பி என் வீரர்களை யெல்லாம் இவ்வஞ்சனுக்கு இரையாக்கினேன், தோல்வியுமுற்றேன்" என்று எந்நாளும் கொதித்த உள்ளத்தனாய் இருப்பது இயற்கையாயின், 'மானம் ஆம் அணி' எனப் பிரித்தமைத்த இப்பொருள் ஏற்புடைத்தாகும்.

பகையற்று அங்ஙனம் வறண்டிருந்த தன்மையைக் கம்பர்,

> தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
> மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்
> போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
> பாவையர் மனமும்போற் பசையு மற்றதே.

[கடப்பதற்கரிய பாபம் புண்ணியம் என்னும் இருவினைகளையும் வென்று, விலக்குதற்கரிய காம வெகுளி மயக்கம் என்னும் பகை அரண்களைக் கடந்து முத்திநிலை எய்துதற்கு முயல்கின்ற பரம வைராகிகள் மனத்தைப் போலவும், பொன்விலைக்குத் தன்னுடல் விற்கும் பாத்தையர் மனத்தைப் போலவும் அப்பாலைவனம் பசையற்றிருந்தது.]

என முத்தர்களையும் வேசியரையும் ஒரு வரிசையில் வைத்து விளக்குவார். முனிவரைப் பேசிய மூச்சிலேயே இவ்வாறு விலைமகளைக் கூறுவது, உயர்ந்தவோர் தத்துவத்திலிருந்து இடறித் தாழ்ந்தவொரு செய்திக்கு இழிவதைக் (From the sublime to the ludicrous) குறிக்க ஆங்கிலத்தில் பயின்றுவரும் Bathos என்னும் அணியைப்போல் தோன்றினும், கம்பரது கூற்றிலே நகைச் சுவையன்றி உண்மைப் பொருளும் அடங்கி இருக்கின்றது. இருவரும் வேண்டுதல் வேண்டாமை அற்றவர்களாதலால் ஓரிரதத்தில் உலாவருதற் கொத்தவர்களே.

T. N. சேஷாசலம்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
" ஆநந்த குணபோதினி "
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக
3-வது ஆண்டு] வெளிவருகின்றது. [3-வது ஆண்டு
பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு
நாயுடு அவர்களால் இப்பந்திரிகை எழுதப்பட்டு
வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

சுகாமிர்தம்.

வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், கிளார்க்குமார் போன்ற மூளைவேலை செய்கின்றவர்களும் பிற நோய்களால் வருத்தப்படுபவர்களும் ரஸாயன ஔஷதங்களைச் சாப்பிடத்தேவையில்லை. மிகவும் இன்றியமையாத ஔஷதம் இது. பல மூலிகைகளைக்கொண்டும், அயம், காந்தம் இவைகளைக்கொண்டும் செய்யப்பட்டுள்ளது.

1-புட்டி 48-வேளை மருந்து ரூபா 3 0 0

கீழ்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

Bhishakwara,
A. KANAKARATNAM A. M. A. C.
Late Hony. Medical Officer & Anatomy Assistant,
Govt. School of Indian Medicine.
Ayurvedalayam,
1/24 *Arunachala Naick St., Chintadripet, Madras.*

வானசாஸ்திரம்

கிரகணங்கள்.

பூரண சூரிய கிரகணத்தின் மூலமாய்த் தற்கால வான சாஸ்திரம் அடைந்திருக்கிற வளர்ச்சி வரையறுக்க முடியாததென்று சொன்னோம். இதைப்பற்றிச் சூரியன் தன்மையை விவரித்த விடத்திற் சொல்லியிருக்கிறோம். இங்கே சூரிய கிரகணத்தைப்பற்றி இன்னும் சில விஷயங்களை எடுத்துக் காட்டுவோம்.

ஒவ்வொரு வருஷமும் பூமியில் குறைந்தது ஒரு சூரிய கிரகணமாவது தோற்றவேண்டும். சாதாரணமாய் இரண்டு கிரகணங்கள் சம்பவிக்கின்றன. சந்திர கிரகணம் ஒருவருஷத்தில் இல்லாதுபோனாலும் போகலாம். ஆனால் சூரியகிரகணம் இருந்தே தீரவேண்டும். ஒரு வருஷத்தில் தோற்றக்கூடிய கிரகணங்கள் ஏழு. அதாவது, ஐந்து சூரிய கிரகணங்களும் இரண்டு சந்திர கிரகணங்களும்; அல்லது நாலு சூரிய கிரகணங்களும் மூன்று சந்திர கிரகணங்களுமாம். இவைகள் பூரண கிரகணங்களா அல்லவா வென்பதைப்பற்றி ஒன்றும் பொதுவாய்ச் சொல்வதற்கில்லை.

பூரண சூரிய கிரகணத்தில் சந்திரன் சூரியனைப் பரிசம் செய்து அதை முற்றாய் மறைக்கும் வரையும் செல்லுங்காலம் ஏறக்குறைய ஒருமணிநேரம். இவ்விதம் சந்திரன் சூரியன் முன்னாக நகர்ந்து செல்லும்போது சூரியமண்டலம் நாலில் மூன்றுபாகம் மறைபடுகிறவரையும் ஒருவகையான வித்தியாசமும் பூமியில் தோன்றுவதில்லை. அதன்மேல்தான் சூரியவெளிச்சம் குறைய ஆரம்பிக்கிறது. சூடு தணிகிறது. பூமியில் ஏதோ அபாயமான சம்பவம் உண்டாகப்போகிறதுபோல் தோற்றப்படுகிறது. சூரியனுடைய வெளிச்சம் முற்றாய் மறைபட்டு இராத்திரிகாலம் போல மாறிவிடுகிறது. மிருகம் பறவை ஊர்வனவெல்லாம் இராத்திரிகாலம் வந்துவிட்டதென்றெண்ணி அக்காலத்தில் நடந்துகொள்ளுகிற விதம் தம்தம் தொழில்களைச் செய்ய ஆரம்பிக்கின்றன.

இந்தச்சமயம்தான் வான சாஸ்திரிகள் மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கும் நேரம். சூரியன் முற்றாய் மறைபட்டிருக்கும் காலம் இரண்டு மூன்று நிமிஷமானதால் இந்த சொற்ப நேரத்துக்குள் எத்தனையோ விஷயங்களைக் கவனிக்கவேண்டி யிருக்கிறது. ஆகவே இதில் தேர்ச்சியடைந்தவர்களேயன்றி மற்றவர்கள் எல்லாவற்றையும் சரியாய்க் கவனித்துக் குறிப்பது முடியாத காரியம்.

சந்திரன் மேற்கிலிருந்து பரிசமாகிறது. ஆகவே சூரியனின் மேற்குப்பக்கம் முதல் மறைபடத்தொடங்கிப் பூரண கிரகணமாகி இது முடிந்ததும், முதல் மறைபட்ட பாகம் வெளுக்கத் தொடங்குகிறது. திரும்பவும் ஒருமணி நேரத்தில் சந்திரன் முற்றாய்ச் சூரியனுக்கு அப்பால் நகர்ந்துபோய் விடுகிறது.

பண்டைநாட்களில் சூரியகிரகணம் மனிதருக்கு மிகவும் பயத்தை உண்டுபண்ணின ஒரு சம்பவமாயிருந்தது. ஒரு பெரிய வானசாஸ்திரி சொல்லியபடி 'பூரண சூரிய கிரகணம் மனிதன் காணக்கூடிய காட்சிகளிலெல்லாம் மிகவும் பயங்கரமானதும் கம்பீரமானதுமான காட்சியாயிருத்தலால் நம்முன்னோர் மனதில் பெரும் பயத்தை அது உண்டுபண்ணினதென்றால் வியக்கத் தக்கதன்று. தற்காலம் சூரியகிரகணத்தைப் பற்றிய அறிவு எல்லாருக்கும் எட்டியிருப்பதனால் இதைப்பற்றிப் பயம்கொள்ளுபவர்கள் மிகச் சிலரே. அதுமாத்திரமன்று. கிரகணம் தோற்றும் காலம் நேரம் இடம் எல்லாம் சரியாய்க் கணித்துக் கிரகணம் தோற்றுவதற்கு முன்னேயே சொல்ல முடியுமாகையால் நாம் காத்திராத தருணத்தில் கிரகணம் சம்பவிப்பதில்லை. இதுபோலவே கடந்துபோன கிரகணங்கள் தோற்றியகாலம் நேரம் இடம் முதலியவைகளையும் வான சாஸ்திரிகள் பிழையறக் கணித்திருக்கிறார்கள். இவ்விதம் சென்றுபோன கிரகணங்களைக்கொண்டு சரித்திர ஆராய்ச்சியில் சந்தேகத்துக் கிடமாயிருந்த காலவரைகளைச் சீர்படுத்த சாத்தியமாயிருக்கிறது.

ஒரு வருஷத்தில் தோன்றும் கிரகணங்கள் அடுத்த வருஷத்தில் தோற்றுவதில்லை. மேலும் ஒரு வருஷத்தில் தோற்றும் கிரகணங்களுக்கும் மற்ற வருஷத்தில் தோற்றும் கிரகணங்களுக்கும் ஒருவகையான தொடர்பம் இல்லை. இதன்காரணம் பூமி சூரியன் சந்திரன் இவைகளின் நிலைகள் மாறுபட்டுக்கொண்டு வருவதே. இவைகள் இந்தவருஷம் ஒரு குறித்தநாளில் ஒருநிலையிலிருந்தால் அடுத்த வருஷமும் அதேநிலையில் திரும்பி வருமானால் இந்தவருஷத்தில் நடந்த சம்பவங்கள் அடுத்த வருஷத்திலும் நடக்கும் என்று சொல்லலாம்.

இது இவ்வித மிருந்தபோதிலும் சூரிய கிரகக் கூட்டங்களின் இயக்கங்கள் நியதிக்குள் அமைந்திருக்கிறபடியால் இவைகள் காலகதியில் திரும்பவும் திரும்பவும் முன்னிருந்த நிலைகளுக்கு வருகின்றன. இவ்விதம் சூரியன் சந்திரன் பூமியாகிய மூன்றும் தம்நிலை முன்னிருந்த இடங்களில் திரும்பிவருவது 18-வருஷம் $10\frac{1}{3}$ நாளில் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்விதம் 18-வருஷம் $10\frac{1}{3}$ நாளில் இவைகளின் நிலைகள் முன்னிருந்த இடங்களில் வந்துசேர்வதால் கிரகணங்கள் இந்தக்காலத்துக்கு ஒருமுறை திரும்பவும் தோன்றும். அதாவது இந்த வருஷம் ஒரு குறித்தநாளில் ஒரு சூரிய கிரகணம் தோன்றுமாயின் அதேகிரகணம் மறுபடியும் 18-வருஷம் $10\frac{1}{3}$ நாளில் பின் அதேகாலத்தில் தோன்றும். ஆனால் அது பூமியில் தோற்றப்படும் இடம் வித்தியாசப்படும். இதற்குக் காரணம் இந்த 18-வருஷம் $10\frac{1}{3}$ நாள் காலத்தில் ஒரு நாள் $\frac{1}{3}$ இருப்பதே. இது சரியாய் 10-நாளாயிருக்குமாயின் இந்தவித்தியாசம் தோற்றாது. முதல்தோன்றின இடத்திலிருந்து பூமியின் மூன்றிலொரு பாகத்துக்கப்பால்தான் இக்கிரகணம் தோன்றும் அப்படியே அது இரண்டாம் தடவை திரும்பி வரும்பொழுது $\frac{2}{3}$ பாகத்துக்கப்பால் தோன்றும். மூன்றாம்முறை தோற்றும்போது அதாவது 54 வருஷம் 1 மாதத்தின்பின் முதல் தோன்றின இடத்தில் தோற்றப்படும். இதுவும் சற்று வடக்குப் பக்கமாகவோ அல்லது தெற்குப்பக்கமாகவோ விலகியே தோற்றுகிறது. இதன் காரணம் ஒவ்வொரு கிரகணமும் இவ்விதம் 18 வருஷம் $10\frac{1}{3}$ நாளுக்கொரு முறை தோற்றும்போது வடக்கிலிருந்து தெற்குப்பக்கமாகவோ அல்லது தெற்கிலிருந்து வடக்கு முகமாகவோ விலகிக்கொண்டே போகிறது. இவ்விதம் விலகிக்கொண்டு போவதினால் வடக்குத் துருவத்தில் முதல் காணப்படும் ஒரு சூரிய கிரகணம் 18-வருஷம் $10\frac{1}{3}$ நாளுக் கொருமுறை திரும்பவும் திரும்பவும் தோற்றப்பட்டு வடக்கிலிருந்து ஒவ்வொரு முறையும் விலகிவிலகி முடிவில் தென் துருவத்துக்கு வந்துவிடுகிறது. இவ்விதம் வட துருவத்திலிருந்து தென் துருவத்துக்கு வரச் செல்லுங் காலம் 1150-வருஷம். இவ்விதம் 1150-வருஷத்தில் ஒருகிரகணம் பூமியில் தோன்றி மறைந்து போகிறது. திரும்பவும் 12000-வருஷங்களுக்குப்பின் தான் முன்னிருந்த நிலைகளில் பூமி சூரியன் சந்திரன் வரக்கூடும். ஆகவே இந்தக்காலத்துக்குள் சூரியகிரகக் கூட்டத்தில் ஒருமாறுதலும் உண்டாகாதிருந்தால் முன் நடந்தவைகள் மறுபடியும் அதேமாதிரி வேற்றுமை சற்றும் தோன்றாது சம்பவிக்கும். ஆகவே தற்கால வானசாஸ்திரிகள் சூரியகிரகணங்கள் எக்காலத்தில் எந்த இடங்களில் என்ன நேரங்களில் தோற்றுமென்பதை பிசகாமல் கணிக்கத்தக்கவர்களா யிருக்கிறார்கள். இது போலவே ஒரு குறித்த நிலையில் தோன்றும் சந்திரகிரகணங்களும் குறித்தகாலத்துக் கொருமுறை திரும்பியும் திரும்பியும் தோன்றிமறைகிறது.

சூரியகிரகணங்கள் பண்டைநாட்களில் மனிதருடைய மனதைக் கவர்ந்த ஒரு காட்சியாயிருந்தது. ஆகவே பண்டைநாளில் சிறப்புற்றோங்கிய சாதியார் ஒவ்வொருவரும் கிரகணங்கள் சம்பவித்ததைப்பற்றிய குறிப்புக்களை வரைந்து வைத்திருக்கிறார்கள். சீனாவில் 4250 வருஷங்களுக்குமுன் தோற்றப்பட்ட ஒருகிரகணத்தின் வரலாறு காணப்படுகிறது. இதுபோலவே அஸிரியர் கிரேக்கர் ரோமர் முதலிய சாதியாரெல்லாரும் அவ்வத்தேசங்களில் தோற்றப்பட்ட கிரகணங்களைப் பற்றி எழுதி யிருக்கிறார்கள். ஆனால் இவைகளின் விசேஷம் சரித்திரத்தோடு சம்பந்தப்பட்டதே தவிர வானசாஸ்திர வளர்ச்சிக்கு ஒருவகையான உதவியும் புரியவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டுக்குப்பின் தூரதிருஷ்டியின் உதவியால் சூரிய கிரகணங்கள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இப்போது சனங்களுக்குச் சூரியனைப் பற்றி எட்டியிருக்கிற அறிவு எத்தன்மையதென்பதைப் பற்றிச் சொல்லி யிருக்கிறோம்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A., B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றனது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தங்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

இளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

இங்கிலாந்தில் நமக்கு வேலை கிடைப்பதற்கு வழி யில்லாமல் 25,000 பேர் கனடாவில் வயல் வேலைக்குப் போக வேண்டிக்கொண் டிருக்கின்றனராம்.

***

ஹைகோர்ட் ஜட்ஜிகளுடைய சம்பளத்தை அதிக மாக்கவேண்டு மென்று ஒரு பிரேரேபணை, லெஜிஸ் லேடிவ் அஸம்பிலியில் மிஸ்டர் எ எச். கஸ்நாவி என்ப வர் கொண்டுவருவதாகத் தெரிகின்றது

***

கொசுக்களின் உபத்திரவம் இங்கிலாந்திலே இன் னும் மூன்று வாரத்தில் ஏற்படும் என்று நினைக்கின்றார் கள். இந்த அளவிற்குக் கொசுக்கள் கூட்டம் அந்த நாட்டில் இதுவரையில் கண்டதில்லை என்னும்படி இருக்குமாம்.

***

முதலியார்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் காஞ்சீபுரத்தில் சென்ற வாரம் ஒரு கோவில் விஷய மாகக் கலகமுண்டாகி அதனில் நான்கு முதலியார் களுக்கு உயிர் போயிற்று. ஏழு பேர் காயமடைந்தார் களென்று தெரிகிறது. இறந்தவர்களில் கோவில் டிரஸ்டியாயிருந்த சபாபதிமுதலியார் என்பவரும் ஒரு வர்.

***

சென்னையில் ஹைகோர்ட் ஜட்ஜாக விருக்கும், ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் தேவதாஸ் அவர்களின் புத் திரி மிஸ் சீதாவடிவு தேவதாஸ் என்பவர், சென்னை ஹை கோர்டில் அட்வகேட்டாகச் சென்றதிங்கட்கிழமை தன் னைப் பதிவுசெய்து கொண்டார். இந்நகரில் இவர்தான் இதுவரையில் பெண்பாலார்களுக்குள் அட்வகேட் ஆன வர்.

***

டச் இண்டீஸைச் சேர்ந்த பர்லோவே என்னு மொரு தீவில் இந்த மாதம் நாலாந்தேதி ஒரு பெரிய பூகம்பம் உண்டாயிற்று. அதனால் அத்தீவின் பெரும் பாகம் கடலிற்குள் அமிழ்ந்து போயிற்று. அதுவுமல்லா மல் எரிமலையொன்று வெடித்து நெருப்பு வழிந்து ஆயிரம் பேருக்குமேல் அழித்து விட்டது. அறுநூறு பேர் காயம் அடைந்தனர்.

***

பர்தோலி வரி விஷயத்தைப் பற்றி இராஜாங்கத் தாருடன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி, சிறைபுகுந்த சத்தியாக்கிரகிகள் பதின்மூன்றுபேரும் விடுதலையடைந்த னர். வல்லபாய் பெடேல் அவர்களும் இனிப் பழைய கிஸ் தியைத் தாமதமில்லாமல் செலுத்தி விடுவதே தகுதி யென்று குடியானவர்களுக்குத் தெரிவித்தார். ராமசந் திரபட் அவர்கள் கவர்ன்மெண்ட் ரெவின்யூமெம்பர், மிஸ் டர் ரியூ என்பவர் கையில் கிஸ்தியின் பழைய விகிதத் திற்கும் புதுவிகிதத்திற்குமுள்ள வித்தியாசத் தொகை யாகிய ரூ 70,000 கொடுத்துவைத்திருக்கின்றார்.

***

எலெக்ஷனின்போது ஓட் செய்தவர்களே, திரும் பித்திரும்பி வந்து வோட் செய்கின்ற மோசத்தைத் தடுக்க ஏதனில் ஒரு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். ஒருவன் ஒருதரம் வோட் கொடுத்ததும் அங்கேயே வைத்திருக்கின்ற வொரு திராவகத்தில் தன் விரலைத் தோய்க்க வேண்டும். உடனே அந்தத் திராவகத்தின் வர்ணம் அவன் விரலில் ஏறி என்ன கழுவினாலும் மூன்று நாளைக்குப் போகாது. ஆதலால் ஒருவனே திரும்பி வேறு பேர் சொல்லிக்கொண்டு வோட் செய்ய வந்தால் விரலிலுள்ள நிறத்தால் உடனே மோசத்தைக் கண்டு பிடித்துவிட முடியும்.

***

ஸ்ரீமான். எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் ஸ்ரீமான் ஷண் முகம் செட்டியார் இருவரும் லண்டனிலிருந்து இந்தி யாவுக்கு வருவதற்கு 'மன்றுவா' என்னும் தபால் கப்ப லில் பிரயாணமா யிருக்கிறார்கள்.

***

கோச்சின் சட்டசபையில் ஹிந்தி பாஷையைப் பள் ளிக்கூடங்களில் ஒரு கட்டாயப்பாடமாக மூன்றும்பாரத் திலிருந்து படிப்பிக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது.

***

சென்ற சனிக்கிழமை குண்டூர் ஜில்லா வனபரிபால கர் அப்துல் கரீம் என்பவருக்கும் உதவி இன்ஜினீயர் A.S. ராசகோபால ஐயங்கார் மகளாகிய ஜானகி என்ப வருக்கும் சென்னை விவாக ரிஜிஸ்டார் முன்பாக விவா கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

***

சிந்துநதியின் உபநதியொன்றில் ஒருபெரிய பனிக் கட்டிமலை கரைந்து வெள்ளப்பிரவாகம் உண்டாயிருக்கி றது. சிலநாட்களுக்கு முன்னமே இச்சம்பவம் நடக்கலா மென்று தெரிந்திருந்ததால் இதற்குவேண்டிய பந் தோபஸ்துகள் செய்யப்பட்டன.

***

பம்பாய் நெசவு ஆலைகளில் வேலை நிறுத்தத்தைச் சமாதானம் பண்ணும்படி பம்பாய் கவர்ன்மெண்டார் சமாதான போர்ட்டு ஒன்றை ஏற்படுத்த இருப்பதாய்த் தொழிலாளருக்கும் சொந்தக்காரருக்கும் தெரிவித்திருக் கிறார்கள். இதன் மூலமாய்ச் சீக்கிரத்தில் இந்த வேலை நிறுத்தம் முடிவுக்கு வரலாமென்று எண்ண இடமிருக் கிறது.

***

லாகூரில் சென்றவாரம் நடந்த பகற்கொள்ளையில் சம்பந்தப்பட்ட கெல்ட் என்னும் ஆங்கில இந்தியன் கைதி செய்யப்பட்டிருக்கிறான். இவன் வடமேற்கு ரயில் பாதையின் தொழிற் சாலையில் வேலைசெய்யும் ஒருவன். இவன் வீட்டைச் சோதனை செய்தபொழுது. 45,000 ரூபாயும் நிலக்கரிக் கிடங்கில் 42,000 ரூபாய் நோட்டுக ளும் இவன் உடுப்பில் 3000 ரூபாயும் கண்டெடுக்கப் பட்டன. இன்னும் அகப்பட வேண்டிய ரூபாய் ஏறக் குறைய 3000 தான்.

***

பம்பாய் நகரத்தில் ஓடும் மோட்டார் வண்டிகள் ஏறக்குறைய 10,000. இதில் சென்ற வருஷம் பதிவு செய்யப்பட்ட வண்டிகள் 3400. சென்ற வருஷத்தில் 2439 மோட்டார் விபத்துக்கள்சம்பவித்தனவாம்.

***

மேற்குக் கரையில் ஆலப்பள்ளிக் கருகில் கடல் கரையி லிருந்து ஒருமைல்தூரம் பின்தள்ளிச் சென்றிருக்கிற தாம். கடலிலிருந்த கட்டுமரங்களும் வள்ளங்களும் நீர் வற்றவே தரையில்தங்கிவிட்டன. மீன்களும் கடல்பாம்பு களும் செத்துக் கிடக்கின்றனவாம். இதேமாதிரிச் சில வருஷங்களுக்கு முன் திருவாங்கூர் கரையிலும் கடல் பின்தள்ளிச் சென்றதாம்.

***

ரேடியோ என்னும் எந்திரத்தின் உதவியால் இது வரையில் சப்தம் மாத்திரம் அனுப்பப்பட்டுவந்தது. ரேடியோ எந்திரம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் தேசதேசங்களுக்கப்பால் பேசுவதையும் பாடுவதையும் தம் வீட்டிலிருந்தே கேட்கக் கூடியவர்களா யிருந்தார் கள். இப்பொழுது உருவப்படங்களும் இந்த ரேடியோ வின் மூலமாய் இமைக்கு முன் எங்கும் அனுப்புவதற்கு எந்திரம் ஐரோப்பாவில் ஆஸ்டிரியா தேசத்தில் இரண் டொரு மாதத்தில் அமைக்கப் போகின்றார்கள். இந்தப் படங்களைப் பெற்றுக் காட்டக்கூடிய எந்திரத்தை வீட் டிலேவாங்கி வைத்துக்கொண்டால் தினந்தோறும் உல கத்திலுள்ள சில பிரமுகர்களின் படங்களைத் தினம் ஒரு மணிநேரம் பார்க்கலாம். ஓடிப்போன திருடர் முதலான வர்கள் படத்தையும் அந்த நிமிஷமே எல்லாத்தேசப் போலீஸாருக்கும் இவ்விதமே ரேடியோவின் மூலமாய் அனுப்ப முடியும்.

139016

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at differen periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)